வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 21.06.2025 சனிக்கிழமை இதழ் : 172 பக்கங்கள் : 12

# தமிழ் மக்களின் இருப்பு வடக்கில் கேள்விக்குறி!

## கூறுகிறார் அமைச்சர் சந்திரசேகர்



யாழ்ப்பாணம், ஜூன் 21

**வடக்கு மாகாணத்தில் வாழும் தமிழர்களின் இருப்பு கேள்விக் குறியாக மாறிவருகின்றது என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திர சேகர் தெரிவித்தார்.**

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான கமநல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் ரோஹன ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாக விவசாயம், கால்நடை, நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சர் கே.டி.லால்காந்த, சிறப்பு அதிதியாக கடற்றொழில் மற்றும் நீரியல், கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், விசேட அதிதியாக வட மாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகேசன், பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் உள்ளிட்ட ஆசிரியர்கள், அதிபர்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு 11




## செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி நேற்றுப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 21

செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரி கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

செம்மணி- சித்துப்பாத்தி இந்து மயானப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவந்த மனிதப் புதைகுழி தொடர்பான பரீட்சார்த்த அகழ்வுப் பணிகளில் மொத்தமாக 19 முழுமையான மனித என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இவை தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனப் பலரும் வலியுறுத்தி வந்த நிலையிலேயே வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் 11

## நாமலை பழிதீர்க்க காத்திருந்தேன்!

### சபையில் அர்ச்சுனா எம்.பி.

கொழும்பு, ஜூன் 21

ஒரு காலத்தில் தனது அப்பாவைக் கொலை செய்த நாமல் ராஜபக்ஷவை கொலை செய்ய நினைத்ததாக பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று அவர் உரையாற்றினார். 11

## அதிவேக வீதியின் சேவை பகுதியை 10,000 ரூபாவுக்கு 99 ஆண்டு குத்தகைக்கு எடுத்தது ராஜபக்ஷ குடும்பம்!

கொழும்பு, ஜூன் 21

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் சேவைப் பகுதியை ராஜபக்ஷ குடும்பத்தினர் 10,000 ரூபாவுக்கு 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுத்ததாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் பிமல் ரத்நாயக்க, ராஜபக்ஷ குடும்பத்தின் கூட்டாளிகள் பல அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பகுதிகளை நிர்மாணிப்பதைத் தடுத்ததாகக் கூறினார்.

"தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கட்டுமானத்தின்போது பல முரண்பாடுகள் இருந்தன, அவற்றில் பல சாத்தியக் கூறு ஆய்வுகளுக்கு எதிராக செயல்படுத்தப்பட்டன. இந்த திட்டத்தின் மூலம் பில்லியன் கணக்கானவை வீணடிக்கப்பட்டுள்ளன," என்று அவர் கூறினார்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் அசல் திட்டத்தின் ஒரு பகுதியாக இல்லாத நுழைவுப் புள்ளிகளுடன் இரண்டு பரிமாற்றங்களை நிர்மாணித்ததில் அத்தகைய முரண்பாடு ஒன்று இருப்பதாக 11

## எம்.பி. பதவியைத் துறந்தார் பிரதி நிதியமைச்சர் ஹர்ஷன!



கொழும்பு, ஜூன் 21

பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும, பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்திருப்பதை பாராளுமன்ற செயலாளர் நாயகம் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரும், நிதி மற்றும் திட்டமிடல் பிரதியமைச்சருமான ஹர்ஷன 11

## வலி. தென்மேற்கு பிரதேச சபை தமிழ் அரசுக் கட்சி வசமாகியது!

யாழ்ப்பாணம், ஜூன் 21

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தவிசாளராக, கந்தையா ஜெசிதன் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், உப தவிசாளராக பேரின்பநாயகம் சுபாகர் தெரிவு செய்யப்பட்டார்.

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரை தெரிவு செய்வதற்கான கூட்டம், வடக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பாபு தேவநந்தினி தலைமையில் நேற்று இடம் பெற்றது.

சபையில், இலங்கை தமிழ் அரசு கட்சியின் 11

## ஊர்காவற்றுறை பிரதேச சபையை கைப்பற்றியது தமிழ்க் காங்கிரஸ்!

யாழ்ப்பாணம், ஜூன் 21

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளராக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த அன்னலிங்கம் அன்னராசா திருவுளச்சீட்டு முறையில் தெரிவு செய்யப்பட்டார்.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளரை தெரிவு செய்வதற்கான அமர்வு நேற்றுக் காலை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தவிசாளரை தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், அகில 11

## மடு ஆடித் திருவிழா ஏற்பாடுகள் பூர்த்தி

மன்னார், ஜூன் 21

மன்னார் மருதமடுத் திருப்பதியின் ஆடி மாதத் திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று மன்னார் மாவட்ட செயலர் க. கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மருதமடு திருப்பதியின் ஆடி மாத திருவிழாவையொட்டி முன்னாயத்தக் கலந்துரையாடல் மன்னார் மாவட்ட செயலகத்தில் 11

## தமிழ் அரசு வசமாகியது வேலணை பிரதேச சபை

யாழ்ப்பாணம், ஜூன் 21

வேலணை பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் உறுப்பினர் சிவலிங்கம் அசோக்குமர் தெரிவாகியுள்ளார்.

வேலணை பிரதேச சபையின் தவிசாளர் மற்றும், பிரதி தவிசாளரை தெரிவு செய்வதற்கான கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு தலைமையில் இடம்பெற்றது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் 11

## இரு தமிழ் அரசியல்வாதிகள் உட்பட 28 பேர்மீது விசாரணை

கொழும்பு, ஜூன் 21

தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கடந்த அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் உட்பட 28 அரசியல்வாதிகளின் சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதில், முக்கிய இரண்டு தமிழ் அரசியல்வாதிகளும் உள்ளடங்குவதாக தகவல் வெளியாகியுள்ளது.

பொலிஸ் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினால், இந்த விசாரணைகள் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை உணவுத் திட்டம் தொடர்பில் ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு மாகாணத்தில் உலக உணவு திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுவரும் பாடசாலை உணவுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கிராமிய சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலர் சம்பத் மந்திரிநாயக்க, வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜெயராணி பரமோதயன், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஆ.சிறி, பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - திட்டமிடல் பணிப்பாளர் கே.சிவச்சந்திரன், பிரதித் திட்டப் பணிப்பாளர் திருமதி கே.நிறஞ்சலா, தேசிய உலக உணவு நிகழ்ச்சி திட்ட ஒருங்கிணைப்பாளர் முஸ்தபா நிஹமத் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

2023ஆம் ஆண்டிலிருந்து வடக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பாடசாலை மாணவர்களுக்கான உணவு வழங்கல் திட்டத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பிலும் திட்டத்தின் நடைமுறையாக்கலிலுள்ள சவால்கள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது. (அ)

# முதலீட்டுச் சபையின் முன்னேற்ற மீளாய்வு ஜனாதிபதி தலைமையில்

கொழும்பு, ஜூன் 21

இலங்கை முதலீட்டு சபையின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், ஜனாதிபதி அனுர குமார திசநாயக்க தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், வெளிநாட்டு நேரடி முதலீட்டை, 96 மில்லியன் டொலர்களால் அதிகரிக்க முடிந்துள்ளதாக, இலங்கை முதலீட்டுச் சபை குறிப்பிட்டுள்ளது.

2024 இன் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில், 2025 இன் முதல் காலாண்டில், உள்நாட்டு முதலீடுகள் 21 மில்லியன் டொலர்களாலும், ஏற்றுமதி வருமானம் 176 மில்லியன் டொலர்களாலும் அதிகரித்துள்ளது.

2025 இல் இதுவரை, இலங்கைக்கு 4 ஆயிரத்து 669 மில்லியன் டொலர் பெறுமதியான வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளதாகவும், முதலீட்டு சபை அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இலங்கைக்கு முதலீடுகளை ஈர்ப்பதில் காணப்படும் பிரச்சினைகள், சவால்கள் மற்றும் சாத்தியமான தீர்வுகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இங்கு கருத்து வெளியிட்ட ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க,

நாட்டின் பொருளாதாரம் மற்றும் கிராமிய வாழ்க்கையை மேம்படுத்தும் பணியின் பெரும் பகுதி, இலங்கை முதலீட்டுச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

பாரம்பரிய முதலீட்டுத் துறைகளில் முதலீடுகளை ஈர்க்கும் திறன் வரையறுக்கப்பட்டுள்ளதாவும், ஒரு நாடாக, புதிய முதலீட்டுத் துறைகளை இனங்காண வேண்டும் எனவும், அதற்கான பொறுப்பு முதலீட்டு சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில், ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ, முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத் மற்றும் முதலீட்டுச் சபையின் பதில் பணிப்பாளர் நாயகம் ரேணுகா வீரக்கோன் உட்பட முதலீட்டு சபையின் சிரேஷ்ட அதிகாரிகள் பங்கேற்றனர். (அ)

# நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 80 ஆவது ஆண்டு அமுத விழா!

## நிகழ்வுகளை இரண்டு நாள்கள் நடத்த ஏற்பாடு



யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம், நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமுத விழா நிகழ்வுகள் இரண்டு நாள்கள் நடைபெறவுள்ளன.

இன்று சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் மாலை 6.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.

இன்று சனிக்கிழமை சாரங்கா இசைமன்ற இயக்குநரும் ஓய்வுநிலை ஆசிரியருமான திருமதி வாசஸ்பதி ரஜீபன் தலைமையில் சங்கிலியன் அரங்கில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிராம அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி கஜானி பார்த்தீபன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி சுகன்யா அரவிந்தன், யாழ். மாநகர சபை உறுப்பினர் திருமதி சரஸ்வதி சுகிர்தராஜ், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த திருமதி தயாபரன் மலர்மகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

விசேட நிகழ்வாகக் கலாநிதி க.சிதம்பரநாதனின் அரங்க செயற்பாட்டுக் குழுவினரின் பறையும் பாடலும் நிகழ்வு இடம்பெறும்.

தொடர்ந்து மன்றத்தில் நடைபெறும் வகுப்புகளில் கல்வி கற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.


இதனையடுத்து மன்றத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. தொடர்ந்து மன்றத்தில் அறநெறி வகுப்புகளில் கற்கும் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெறும்.

இரண்டாம் நாளான ஞாயிற்றுக்கிழமை நிகழ்வுகள் சங்கிலியன் மன்றத் தலைவர் மருத்துவர் வி.ஜனகன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாகத் தொழிலதிபர் ஈ.எஸ். பேரம்பலம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் ரி. ஜெயசீலன், தொழிலதிபர் கணேசராஜா செந்தூரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் விசேட நிகழ்வாக விருந்தினர்கள் பாரம்பரியக் கலையான சிலம்பாட்டத்துடன் சங்கிலியன் மன்னனின் தோரணை வாயிலிலிருந்து விழா மேடைக்கு அழைத்து வரப்படவுள்ளனர். (அ-8)



# யாழ். அரச அதிபராக பிரதீபன் நியமனம்!

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாண மாவட்டத்தின் நிரந்தர அரசாங்க அதிபராக மருதலிங்கம் பிரதீபன் அமைச்சரவை அனுமதியின் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் நேற்று அமைச்சரவை செயலாளர் டபிள்யூ. எம். டி. ஜே. பெர்னாண்டோவால் அமைச்சரவை அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

ம.பிரதீபன் 2024 மார்ச் 09 ஆம் திகதி முதல் யாழ்ப்பாண மாவட்டத்தின் பதில் அரசாங்க அதிபராக கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

# வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் கண்காட்சி!



யாழ்ப்பாணம், ஜூன் 21

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் 2025 ஆம் ஆண்டுக்கான கல்விக் கண்காட்சி கல்லூரி அதிபர் திருமதி கி.குலசங்கர் தலைமையில் நேற்றுக் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3:00 மணிவரை கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் முதல் நிகழ்வாக நிகழ்வில் விருந்தினர்கள் மலர்மாலை அணிவித்து விழா மண்டபம் வரை அழைத்துவரப்பட்டு மங்கல சுடர் ஏற்றலுடன் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப்பணிப்பாளர் ப.அருந்தவச்செல்வன், சிறப்பு விருந்தினராக வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியர் சி.புஸ்பராசா ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்வை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வில் அயல் பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள் என பலரும் சென்று பார்வையிட்டனர்.

# கழிவுப் பொருட்களுக்கு தீ வைத்த யாழ். மாநகரசபை

யாழ்ப்பாணம், ஜூன் 21

மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கல்லூண்டாய் பகுதியில் யாழ்ப்பாணம் மாநகர சபையினர் கழிவுப் பொருட்களைச் சேகரித்து வருகின்றனர்.

குறித்த கழிவு சேகரிக்கும் பகுதிக்கு தொடர்ச்சியாக தீ வைத்து வருவதால் வீதியால் செல்லும் பயணிகளும், அண்டியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களும் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.



நேற்றும் குப்பை மேட்டுக்கு தீ வைத்ததால் அதன்மூலம் வெளியான புகை வீதியெங்கும் பரவியதால் வீதியால் சென்ற மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். மாநகர சபையின் இவ்வாறான அநாகரீகமான செயற்பாடுகள் குறித்து பல தடவைகள் செய்திகள் வெளியாகியபோதும் அவர்கள் தொடர்ந்தும் இவ்வாறு செய்வது மக்களை பற்றிய அக்கறை இல்லாத தன்மையை எடுத்துக் காட்டுகின்றது என மக்கள் தெரிவித்தனர். (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 21.06.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 08
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழர்களுக்கான தீர்வுக் கதைகள்

தேசிய மக்கள் சக்தியின் பிரதமர் ஹரினி அமரசூரிய தமிழர்களுக்கு நிச்சயம் தீர்வு உண்டு. புதிய அரசியல் யாப்பு மூலம் அதனை நாம் செய்தே யாகுவோம் என்று தெரிவித்திருக்கின்றார். இலங்கை சுதந்திரம் அடைந்த தாகச் சொல்லப்படும் காலத்திலிருந்து கொழும்பின் அதிகாரத்தை கைப்பற்றிய அரசாங்கங்கள் பல இவ்வாறான தீர்வுக் கதைகளை கூறியிருக்கின்றன. ஆனால் இதுவரையில் எதுவும் செயல் வடிவம் பெறவில்லை.

செயல் வடிவம் பெற்றது ஒரேயொரு விடயம்தான், பதின்மூன்றாவது திருத்தச்சட்டம். இன்றுவரையில் அதனைத் தாண்டிய ஓர் அரசியல் தீர்வு சாத்தியப்படவில்லை. ஆனால், பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தைக் கூட முழுமையாக அமுல்படுத்தப்பட முடியவில்லை என்பதுதான் முக்கியமான விடயம். இதற்கு தமிழ் அரசியல்வாதிகளும் ஒரு பிரதான காரணம். அதனை அடிப்படையாக் கொண்டு முன்னோக்கி பயணிக்கும் உபாயங்கள் தொடர்பில் சிந்திக்காமல் அதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கும் போது, அதனை முறையாக கச்சிதமாக பயன்படுத்திக் கொள்ளாமல் விட்டமையும் இன்றைய பின்னடைவுகளுக்கு பிரதான காரணமாகும். தமிழ் அரசியல் தரப்புக்கள் தொடர்ந்தும் போக முடியா ஊருக்கு வழி சொல்லும் வேலைகளையே முன்னெடுத்து வருகின்றன.

தென்னிலங்கை ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தானாக தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தை கையாளுவார்கள் என்பதற்கு எந்தவொரு சான்றும் இல்லை. ஏனெனில் அரசியலமைப்பின் பதின் மூன்றாவது திருத்தச்சட்டத்தையே முழுமையாக அமுல்படுத்த விரும்பாதவர்கள். அதற்கப்பால் சென்று இனப்பிரச்னைக்கான தீர்வை காண்பார்கள் என்பதை இனியும் எவரேனும் நம்பினால் அது அவர்களின் அரசியல் அறிவுக் குறைபாடாகவே இருக்க முடியும்.

இந்தப் பின்புலத்தில்தான் ஹரினி அமரசூரியவின் கருத்தையும் நோக்க வேண்டும். அமரசூரிய குறிப்பிட்டிருக்கும் இன்னொரு விடயமும் முக்கியமானது. அதாவது, தமிழ் மக்கள் தங்களுடைய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியிருக்கின்றனர். இந்த அடிப்படையில் நோக்கினால் தாங்கள் விரும்பும் ஒன்றை, தமிழ் மக்களின் விருப்பமாக கணிக்க முற்பட்டாலும் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இது தொடர்பில் நாம் முன்னரும் குறிப்பிட்டிருக்கின்றோம். அதாவது, அரசியலமைப்பிலுள்ள பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை மேலும் பலவீனப்படுத்தும் நோக்கில் அரைகுறையான அரசியல் தீர்வு ஒன்றை, அற்புதமான தீர்வாக காண்பிக்க முற்படலாம். இதற்கு தமிழர் பக்கத்திலுள்ள அரசியல்வாதிகளும் பயன்படுத்தப்படலாம்.

இன்றைய பிராந்திய மற்றும் உலக அரசியல் போக்கில் காணப்படும் பதற்றங்கள் இலங்கை போன்ற சிறிய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதற்கான வாய்ப்புகளை இல்லாமலாக்கிவிட்டது. இலங்கையின் உள் விவகாரம் இப்போது ஒரு விடயமே அல்ல.

இந்த பின்புலத்தில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது, புதிய அரசியல் யாப்பு என்னும் பெயரில் சில விடயங்களை முன்னெடுக்க முயற்சித்தால் அதில் எவரும் தலையீடு செய்யப் போவதில்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், இந்தியாவின் தலையீடு மட்டுமே ஒரேயொரு சாத்தியமான தலையீடாக இருக்க முடியும். அது பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை தாண்டியதாக இருப்பதற்கான எந்தவொரு வாய்ப்பும் இல்லை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒரு புதிய அசியல் யாப்பு ஒன்றை கொண்டுவர முயற்சித்தால், அதன் இலக்கு ஒன்றுதான், இருப்பதையும் பலவீனப்படுத்துவது. ஏனெனில், அரசியல் யாப்பு தொடர்பிலான நகர்வுகளை மேற்கொள்ள ஆரம்பிக்கும்போது, தென்பகுதியிலுள்ள தேசியவாத தரப்புக்கள் பலமடைய முற்படும். அவர்கள் தங்களுக்கான வாய்ப்புகளை தேடிக் கொண்டிருக்கின்றனர். அடுத்த பக்கமாக, பௌத்த கட்டமைப்புகளும் களத்தில் இறங்கும். இதனை காரணம் காண்பித்து தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தங்களின் முயற்சியை வடிவமைக்கும். அப்போது தமிழர் பிரச்சினைக்கான தீர்வே பலியிடப்படும்.

இந்த விடயங்களை கருத்தில் கொண்டு புதிய அரசியல் யாப்பு என்னும் மாயமானை நம்பி தமிழர் தரப்புகள் இனியும் இழுபடப் போகின்றதா அல்லது இன்றைய அரசியல் சூழலிலுள்ள ஆபத்துக்களை புரிந்து கொண்டு, அதற்கேற்ப செயற்படப் போகின்றனவா என்பதில்தான் விடயமுண்டு.

# கரை திரும்பாத மீனவர் தொடர்பில் நேற்றுத் தடயவியல் பரிசோதனை!

முல்லைத்தீவு, ஜூன் 21

முல்லைத்தீவு தீர்த்தக்கரை பகுதியில், கடற்றொழிலுக்கு சென்று கரை திரும்பாத மீனவர் தொடர்பில், கிளிநொச்சி தடயவியல் பொலிஸார், இன்று பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தீர்த்தக்கரை பகுதியில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்க சென்ற நபர் ஒருவர், மீண்டும் கரை திரும்பாத நிலையில் மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மீனவர்கள் நேற்று முன் தினம் கரை திரும்பாத மீனவர் சென்ற மீன்பிடிப் படகை கடலில் இருந்து கரைக்கு கொண்டு வந்தனர்.

குறித்த மீனவர் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பவர்களால் கொலை செய்யப்பட்டு கடலில் வீசப்பட்டிருக்கலாம் என மீனவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில், அவரது உறவினர்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

அதற்கமைய நேற்று சம்பவ இடத்திற்கு விரைந்த, கிளிநொச்சி தடயவியல் பொலிஸார், குறித்த படகில் இருந்த இரத்தக்கறை மற்றும் காயங்கள், மீனவரின் உடை மற்றும் ஏனைய பொருட்கள் மீதான தடயவியல் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

சுனாமியில் தன்னுடைய ஐந்து பிள்ளைகளை பறிகொடுத்த நிலையில் சிலாவத்தை தீர்த்தக்கரையில் தனது மூன்று பிள்ளைகளுடன் வசித்து வரும் 62 வயதான வின்சன் டி போல் அன்ரனி கருணல் எனும் மீனவர் கடற்தொழில் நடவடிக்கைகளுக்காக கடலுக்கு சென்றிருந்த நிலையில் கரை திரும்பவில்லை.

இந்த நிலையில் நேற்றும் குறித்த மீனவரை தேடி, சுமார் 25 இற்கும் மேற்பட்ட படகுகளில் மீனவர்கள் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

(அ)

# மாடுகளை இறைச்சிக்காக கடத்திய இளைஞர்கள் கைது

முல்லைத்தீவு, ஜூன் 21

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட உடையார் கட்டு, மூங்கிலாறு பிரதேசங்களில் மக்களின் மாடுகளை இறைச்சிக்காக கடத்திய இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியாக, மக்களின் வாழ்வாதாரமான கால்நடைகளை இறச்சிக்காக களவாடி விற்பனை செய்யும் நடவடிக்கை இடம்பெற்றது.

கடந்த 18 ஆம் திகதி இரவு வாகனம் ஒன்றில் திருடிய மாடுகளை ஏற்றியவேளை, மக்கள், புதுக்குடியிருப்பு பொலிசாருக்கு தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸ் பரிசோதகர் வி.ரத்னாயக்க தலைமையிலான பொலிஸ் சார்ஜன்ட் அ.அஜீத், பொலிஸ் கான்ஸ்டபிள் வி.டிதுசன், சம்பிக்க மற்றும் திஸநாயக்க உள்ளிட்டவர்கள் இளைஞர்களை கைது செய்தனர்.

வாகனம் ஒன்றில் இரண்டு மாடுகள் ஏற்றப்பட்ட நிலையில் நான்கு நபர்கள் மாடுகளை திருடியுள்ளனர்.

இருட்டுமடு கிராமத்தை சேர்ந்த இரண்டு இளைஞர்களும், மூங்கிலாற்று பகுதியை சேர்ந்த இரண்டு இளைஞர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

(அ)

# போசாக்கு மாத விழிப்புணர்வு மன்னாரில்!

மன்னார், ஜூன் 21

தேசிய போசாக்கு மாதத்தை முன்னிட்டு, பாடசாலை மாணவர்கள் மத்தியில் போசாக்கான உணவுகளை உண்ணும் பழக்கத்தை வலுப்படுத்தும் முகமாக, மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த விசேட விழிப்புணர்வு நிகழ்வு நேற்று மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

"பழங்களும் மரக்கறிகளும் எப்போதும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும் எனும் தொனிப்பொருளில்" இடம்பெற்ற விழிப்புணர்வு நிகழ்வில், சித்திவிநாயகர் இந்து கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

இலங்கையில் ஆண்டு தோறும் அதிகரிக்கும், தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவதற்கான ஆரோக்கியமான உணவு பழக்க வழக்கம் மற்றும் அன்றாட உணவுகளில் தவிர்க்கப்பட வேண்டிய உணவுகள் தொடர்பில், மாணவர்களுக்கு தெளிவூட்டும் விதமாக, விழிப்புணர்வு நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டது.

சுகாதார உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்பட்ட, உடலுக்கு தீங்கு ஏற்படுத்தாத சிற்றுண்டி பரிமாறப்பட்டத்துடன், அன்றாட உணவு பழக்கங்களில், நாம் பின்பற்ற வேண்டிய நடைமுறை தொடர்பான மேடை நாடகமும், மாணவர்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூன் - 21 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 07
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : ஏகாதசி




**மேடம்**
எதிர்பார்த்த வேலை தாமதமாக முடியும். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. அதிகம் உழைக்க வேண்டும்.

**இடபம்**
நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். சமயோஜித புத்தியால் எல்லாப் பிரச்னைகளையும் சமாளித்து வெற்றி பெறுவீர்கள். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். மதிப்புக்

**மிதுனம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக்கும். முயற்சிகள் பலிதமாகும்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். முகப்பொலிவு கூடும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். தடைகள் உடைப்படும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தேவையற்ற அலைச்சல்கள் அதிகரிக்கும். அவசரப்பட்டு விமர்சிக்க வேண்டாம். சக ஊழியர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம். திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

**கன்னி**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் மதிப்புக் கூடும். திறமைகள் வெளிப்படும் நாள்.குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள்.

**துலாம்**
நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளரின் ரசனையை புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள்.


**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். ராஜதந்திரத்தை உடைப்பீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**தனுசு**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. உத்தியோகத்தில் திருப்திகரமான சூழ்நிலை உருவாகும். உழைப்பால் உயரும் நாள்.

**மகரம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். தைரியமான முடிவுகள் எடுக்கும் நாள்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரி ஒத்துழைப்பார். புது அத்தியாயம் நாள்

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் இழுத்துப்போட்டு பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

# புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நேற்று சர்வதேச யோகா தின நிகழ்வு

முல்லைத்தீவு, ஜூன் 21

யாழ். இந்தியத் துணைத் தூதரகமும் இலங்கை யோகா பயிற்சி கல்லூரியும் இணைந்து நடத்திய சர்வதேச யோகா தின நிகழ்வுகள் நேற்றுக் காலை 07.30 மணியளவில் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெற்றன.

விருந்தினர்கள் பிரார்த்தனை அரங்கிற்கு அழைத்து வரப்பட்டு சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் இலங்கை யோகா பயிற்சி கல்லூரிக்கு யோகா உபகரணங்கள் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளியால் வழங்கப்பட்டன. யோகா நிகழ்வில் பங்குபற்றிய அனைவருக்கும் விருந்தினர்களால் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

ஆசிரியர் ஜெயம் ஜெகனின் நெறியாள்கையில் விசேட யோகா ஆற்றுகை இடம்பெற்றிருந்தமை அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

இந்த நிகழ்வில் யாழ். இந்தியத் துணை தூதுவர் சாய்முரளி, இந்தியத் துணைத் தூதரக உயர் அதிகாரி சங்கரன் ஐயா, பாராளுமன்ற உறுப்பினர் திலகநாதன், ஓய்வு நிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் பேரின்பநாயகம், மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# 160 போதை மாத்திரைகளுடன் யாழில் இளைஞன் சிக்கினார்!

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணத்தில் 160 போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் போதை குற்றத் தடுப்புக்கு பொறுப்பாகவுள்ள பொலிஸ் குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மானிப்பாய் சுதுமலை பகுதியைச் சேர்ந்த 24 வயது இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைதான சந்தேக நபரை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)



# மாணவர்களுக்கான கண் சிகிச்சை முகாம்

கிளிநொச்சி, ஜூன் 21

கிளிநொச்சி மாவட்டத்தின் வடக்கு மற்றும் தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட கண் தொடர்பான பிரச்னைக்குரிய பாடசாலை மாணவர்களுக்கான கண் பரிசோதனை முகாம் நேற்று நடைபெற்றது. இதில், கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியில் 700 மாணவர்களுக்கு கண் பரிசோதனை நடைபெற்றது.

புனர்வாழும் புதுவாழ்வும் ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் இலங்கை நிறுவனத்தின் ஊடாக அலாக்கா அறக்கட்டளையினூடாக நகுலேஸ்வரி வாசுதேவன் இலவச மூக்கு கண்ணாடி வழங்கும் திட்டத்தின் ஊடாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்று வருகின்றன.



இதேபோன்று யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவிலும் பாடசாலை மாணவர்களுக்கு கண் பரிசோதனைகள் நடைபெற்றன. இந்த நிலையில், நாளை மறுதினம் 23 ஆம் திகதி வவுனியாவில் உள்ள 1500 பாடசாலை மாணவர்களுக்கு கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. இதே தினத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள 5000 பாடசாலை மாணவர்களுக்கும் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. (எ)

# நிலத்தடி நீரை மேம்படுத்தும் நோக்கில் யாழில் விசேட விழிப்புணர்வு கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். மாவட்டத்தின் நிலத்தடி நீரை மேம்படுத்தும் நோக்கில் விசேட விழிப்புணர்வு கருத்தமர்வு நேற்றுக் காலை யாழ். திருநெல்வேலியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. [illegible]

சர்வதேச அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நீர் மேலாண்மை தொடர்பில் பல்வேறு செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் பங்குதாரர்களான சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம், யாழ். பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் பேராசிரியர்கள், துறைசார் திணைக்கள அதிகாரிகள், மாணவர்கள் மற்றும் திட்டத்தின் பங்குதாரர்களுக்கான விசேட கருத்தமர்வு முன்னெடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் பாதுகாப்புடன் காலி மாநகர முதல்வர் தெரிவு

- முதல்வர் பதவி தேசிய மக்கள் சக்தியிடம்
- பிரதி முதல்வர் பொதுஜன பெரமுன வசம்
- ஐக்கிய மக்கள் சக்தியினர் வெளிநடப்பு

கொழும்பு, ஜூன் 21

**காலி மாநகர சபைக்கு முதல்வர் தெரிவில் ஏற்பட்ட குழப்பங்களை அடுத்து பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட தெரிவில் முதல்வர் பதவியை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியது. பிரதி முதல்வராக சிறீ லங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர் தெரிவானார்.**

காலி மாநகர சபையின் அதிகார பதவிகளுக்கான தெரிவு நேற்று நடைபெற்றது.

காலி மாநகர சபையின் முதல்வரை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பை பகிரங்கமாகவா அல்லது இரகசியமாகவா நடத்துவது என்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது, 19 பேர் இரகசிய வாக்கெடுப்பையும் 17 பேர் பகிரங்க வாக்கெடுப்பையும் ஆதரித்தனர்.

பெரும்பான்மை முடிவின் படி இரகசிய வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து, ஐக்கிய மக்கள் சக்தியின் பல உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர். நிலைமையை கட்டுப்படுத்த பொலிஸார் வரவழைக்கப்பட்டதுடன், சபை நடவடிக்கையும் 30 நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இரகசிய வாக்கெடுப்பில், தேசிய மக்கள் சக்தி கட்சியின் சுனில் கமகே 19 வாக்குகளை பெற்று மாநகர முதல்வராக தெரிவானார்.

பிரதி முதல்வராக சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பிரியந்த சகபந்து தெரிவு செய்யப்பட்டார். (ஐ)

# காலி மாநகர பிரதி முதல்வரின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தம்

## சிறீ லங்கா பொதுஜன பெரமுன அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

காலி மாநகர சபையின் பிரதி முதல்வராக தெரிவான சிறீ லங்கா பொதுஜன பெர முனவின் பிரியந்த கொடகம சஹபந்துவின் கட்சி உறுப்பு ரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசத்தின் ஒப்பத்துடன், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

காலி மாநகர சபையின் முதல்வர், பிரதி முதல்வர் தெரிவின்போது பின்பற்ற வேண்டிய நடைமுறை குறித்து கட்சி அறிவித்திருந்தது. எனினும், அவர் கட்சியின் அறிவுறுத்தல்களுக்கு மாறாக வாக்களிப்பின்போது செயல்பட்டார். இதன் விளைவாக, பிரதி முதல்வராக பிரியந்த கொடகம தெரிவாகியுள்ளார்.

இதனால், அவரின் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப் பட்டுள்ளது - என்று கூறப் பட்டது. (ஐ)

# பூஸா சிறையின் கூரை மீதேறி கைதிகள் இருவர் போராட்டம்

கொழும்பு, ஜூன் 21

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் இருவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை சிறைச்சாலையின் கூரை மீதேறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் சிறைச்சாலையில் மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தே அவர்கள் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பூஸா சிறைச்சாலையில் மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஐந்து கைதிகள் சிறைச்சாலையின் கூரை மீதேறி கடந்த 18 ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இணைய குற்றங்களில் ஈடுபட்ட 85 சீனர்கள் நாடு கடத்தப்பட்டனர்!

கொழும்பு, ஜூன் 21

நாட்டில் தங்கியிருந்து இணையவழி மோசடி உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டமைக்காக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 85 சீனர்கள் நேற்றைய தினம் நாடு கடத்தப்பட்டனர்.

85 சீனப் பிரஜைகளும் நேற்று பின்னிரவு 01.20 மணியளவில் சிறீ லங்கன் விமான சேவையின் யு.எல் - 880 விமானம் ஊடாக சீனாவின் குவாங்சோ நகரத்துக்கு நாடு கடத்தப்பட்டனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 85 சீன பிரஜைகளும் நாடு கடத்தப்படுவதற்காக வெலிசறை குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் தடுப்பு நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே நேற்று நாடு கடத்தப்பட்டனர்.

சீனப் பிரஜைகளுடன் குடிவரவு - குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் மற்றும் விமான நிலைய பாதுகாப்பு பிரிவினர் உட்பட சுமார் 172 அதிகாரிகளும் சீனாவுக்கு பயணித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பலாங்கொடை சபையின் தவிசாளர் இராஜிநாமா!

கொழும்பு, ஜூன் 21

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் பலாங்கொடை பிரதேச சபைக்கு தவிசாளராக தெரிவான ரஞ்சித் உதய குமார தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

இதையடுத்து, பலாங்கொடை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அதிகாரி வெற்றிடமான பதவிக்கு கமஎதிகே ஆரியதாஸவை புதிய தவிசாளராக தெரிவு செய்தார். அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சீனா சென்ற ரில்வின் சில்வா வியாழனன்று நாடு திரும்பினார்!



கொழும்பு, ஜூன் 21

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பின் பேரில் சீனாவுக்கு 10 நாள் பயணமாக சென்ற மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே. வி. பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீண்டும் நாடு திரும்பினார்.

சீனாவின் அபிவிருத்தி செயல்பாடுகள் மற்றும் சுற்றுலாத் தளங்களை பார்வையிடும் நோக்கில் இந்தப் பயணம் அமைந்ததாகக் கூறப்பட்டது.

ரில்வின் சில்வாவுடன் சுமார் 29 பேர் இந்தப் பயணத்தில் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# எஸ். ரி.எவ்வினரிடம் துப்பாக்கி கொள்ளையிட்ட ஐவர் கைது!

கொழும்பு, ஜூன் 21

விசேட அதிரடி படையினரை தாக்கி துப்பாக்கியை கொள்ளையிட்டனர் என்று கூறப்படும் ஐந்து சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம் - கஹடகஸ்திகிலிய பகுதியில் கடந்த 12ஆம் திகதி இடம்பெற்ற இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி வந்த நிலையில் சந்தேகநபர்கள் ஐவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடமிருந்து கொள்ளையிடப்பட்ட கைத்துப்பாக்கி, 10 தோட்டாக்கள், வெடிமருந்துகள், மின்விளக்கு, கத்தி, 2 கைபேசிகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், 23, 28, 33, 36 வயது நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# 44 வாகனங்கள் தற்காலிக நீக்கம்!

கொழும்பு, ஜூன் 21

ஹற்றன் - கண்டி பிரதான வீதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் இ. போ. ச. மற்றும் தனியாருக்கு சொந்தமான 44 வாகனங்கள் தற்காலிகமாக சேவையிலிருந்து நீக்கப்பட்டன.

பாதுகாப்பான மற்றும் தரமான போக்குவரத்து சேவையை உறுதி செய்யும் நோக்குடன் விபத்துகளை குறைக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாக அதிகாரிகள் தெரி வித்தனர்.

அதிக அளவில் புகை வெளிவிடுதல், இயந்திர கோளாறுகள் மற்றும் பாதுகாப்பு குறைபாடுகளை கொண்டிருந்த 15 இலங்கை போக்குவரத்து சபை, தனியார் பேருந்துகள் உடனடியாக ஒதுக்கப்பட்டன. அத்துடன், அந்த வாகனங்களின் வருடாந்த அனுமதியும் பறிமுதல் செய்யப்பட்டது.

பாதிக்கப்பட்ட வாகனங்களின் உரிமையாளர்கள் தேவையான பழுதுபார்ப்புகளை மேற்கொண்டு ஜூன் 30 ஆம் திகதி தொடர் ஆய்வுக்காக வாகனங்களை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இத்தகைய பரிசோதனைகள் நாட்டின் பிற பகுதிகளிலும் தொடரும் என அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

# வாகன இறக்குமதி மூலம் ரூ. 16,500 கோடி வருமானம்!

வாகன இறக்குமதி மூலமாக 16 ஆயிரத்து 300 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே சுங்கத்தின் மேலதிக பணிப்பாளர் சீவலி அருக்கொட இந்தத் தகவலை வெளியிட்டார்.

மேலும், "இந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட வருவாய் இலக்குகளை தாண்டி செல்லும் திறன் சுங்கத்துக்கு உள்ளது. 2025ஆம் ஆண்டில் நாங்கள் பெற்ற வருவாய் இலக்கு 2 இலட்சத்து 11 ஆயிரத்து 500 கோடி ரூபாய்.

கடந்த ஆண்டு, எங்கள் வருவாய் இலக்கு ஒரு இலட்சத்து 53 ஆயிரத்து 300 கோடி ரூபாயாக இருந்தது. ஆனால், நாம் ஒரு இலட்சத்து 53 ஆயிரத்து 500 கோடி ரூபாயை ஈட்டினோம்.

இதேநேரம் இந்த ஆண்டும் ஜூன் நடுப்பகுதி வரையில் நாங்கள் 90 ஆயிரம் கோடி ரூபாயை ஈட்டியுள்ளோம். வாகனங்களை பொறுத்தவரை, 2025 பெப்ரவரி 1, முதல் இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதித்தது. இதுவரை, சுமார் 14 ஆயிரம் வாகனங்கள இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் சுமார் ரூ. 16 ஆயிரத்து 500 கோடி வருமானம் ஈட்டியுள்ளோம். இந்த ஆண்டு, வாகன இறக்குமதியிலிருந்து ரூ. 45 ஆயிரம் கோடி ரூபாய் வருவாயை எதிர்பார்க்கிறோம்." என்றார். (ஐ)

# தேசிய போக்குவரத்து சட்டம் சான்றுரைப்படுத்தப்பட்டது!

கொழும்பு, ஜூன் 21

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலத்தில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன கையொப்பமிட்டு சான்றுரைப்படுத்தினார்.

போக்குவரத்துத் துறையில் அடையாளம் காணப்பட்ட நடைமுறை சிக்கல்கள் சிலவற்றுக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கும் வகையில், தற்போது ஒழுங்குறுத்தப்படாத துறைகள் சிலவற்றை ஒழுங்குறுத்துவதற்காக 1991ஆம் ஆண்டு 37ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தின் பிரிவுகள் சில தற்போதைய சூழலுக்கு ஏற்றவாறு மாற்றும் வகையில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக இந்தச் சட்டமூலம் 2025.05.08ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்கமைய குறித்த சட்டமூலம் 2025.06.05ஆம் திகதி இரண்டாவது வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த, மைத்திரி, ரணில், பஸில் இவர்களில் எவரும் தப்பமுடியாது!

## அரசாங்க தரப்பு சொல்கிறது


கொழும்பு, ஜூன் 21

முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர்கள் பஸில் ராஜபக்ஷ, ஹரிசன், விஜித் விஜிதமுனி டி சொய்சா, லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, லக்ஷ்மன் வசந்த பெரேரா ஆகியோர் 11 கோடி அமெரிக்க டொலர் மதிப்புள்ள கால்நடை இறக்குமதி ஊழலில் ஈடுபட்டமை கண்டறியப்பட்டுள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிஹால் கலப்பதி தெரிவித்துள்ளார்.

இந்த முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் யாரும் தப்பிக்க மாட்டார்கள். அவர்களில் யாருக்கும் எந்த கருணையும் காட்டப்படாது - என்றும் அவர் கூறினார்.

அத்துடன், பால் கறப்பதற்காக பசுக்களை இறக்குமதி செய்வது என்ற போர்வையில் வயதான பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்றும் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றியபோது தெரிவித்தார். (ஐ)

# பிரபல நடிகர் மோகன்லால் பாராளுமன்றுக்கு வருகை!



கொழும்பு, ஜூன் 21

திரைப்பட படப்பிடிப்புக்காக நாட்டுக்கு வருகை தந்துள்ள பிரபல மலையாள நடிகர் மோகன்லால் விஸ்வநாதன் இலங்கை பாராளுமன்ற நடவடிக்கைகளை நேரில் பார்த்தார்.

பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலியின் அழைப்புக்கு அமைய நேற்று முன்தினம் பாராளுமன்றம் வந்த நடிகர் மோகன்லால் உள்ளிட்ட குழுவினர் சபாநாயகரின் கலரியில் இருந்து பாராளுமன்ற அமர்வை பார்வையிட்டனர்.

இதன்போது, அவர் பிரதமர் ஹரிணி அமரசூரிய, சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன மற்றும் பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடினார். பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் இதன் போது கலந்துகொண்டார். (ஐ)

# இளைஞர் கொலை சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஜூன் 21

இளைஞர் ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொன்ற சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 14ஆம் திகதி கம்பஹா, ராகமை, வலபொல பகுதியில் 28 வயதுடைய இளைஞர் கூரிய ஆயுதத்தால் குத்திக் கொல்லப்பட்டார்.

இந்த கொலை தொடர்பில் விசாரணை நடத்தி வரும் ராகமை பொலிஸார் நேற்று முன்தினம் சந்தேகநபரை கைது செய்தனர்.

இவ்வாறு கைதானவர் ராகமை - பொல்கஹஹேன பகுதியை சேர்ந்த 21 வயதுடைய இளைஞராவார். (ஐ)

# ஈரானில் சிக்கிய இலங்கையரை மீட்பதற்கு இந்தியாவிடம் உதவி!

கொழும்பு, ஜூன் 21

ஈரானில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்பதற்கு இந்திய வெளிவிவகார அமைச்சின் உதவியை இலங்கை நாடியுள்ளது.

ஈரான் - இஸ்ரேல் இடையே போர் தீவிரமடைந்து வருகிறது. இதன் ஒரு கட்டமாகவே, வெளிவிவகார அமைச்சு கொழும்பிலுள்ள இந்திய துணைத் தூதரகம் ஊடாக இந்திய வெளிவிவகார அமைச்சை தொடர்பு கொண்டுள்ளது.

இதன்படி, எல்லைகளில் சாத்தியமான இடங்களை இலங்கையர்கள் வந்தடைந்தால் அவர்களுக்கு உதவி அளிப்பதற்கு இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பாதாள உலக குழு தலைவரின் பிரதான துப்பாக்கிதாரி கைது!

கொழும்பு, ஜூன் 21

பாதாள உலகக் குழு தலைவர் ஒருவரின் பிரதான துப்பாக்கிதாரியையும் அவரின் சாரதியையும் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருவரும் புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து துப்பாக்கி ஒன்றும் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

காலி - உரகஸ்மன்ஹந்திய பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அத்துடன், சந்தேகநபர் பயணித்த கார் கைப்பற்றப்பட்டதுடன், சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர்கள் காலியை சேர்ந்த 41 வயது, இரத்தினபுரியை சேர்ந்த 20 வயது நபர்களாவர்.

சந்தேக நபர் வெளிநாட்டில் உள்ள பாதாள உலக கும்பல் தலைவரின் பிரதான துப்பாக்கிதாரியாக செயல்பட்டு வந்தவர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைதான சந்தேக நபர் 2018 செப்ரெம்பர் 27ஆம் திகதி காலி எல்பிட்டிய ஒருவரையும், 2022 டிசெம்பர் 23 ஆம் திகதி ஒருவரையும் சுட்டுக் கொன்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# புத்தளம் விபத்தில் இளைஞர் மரணம்!

சிலாபம், ஜூன் 21

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோர தூணில் மோதியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து பாலாவி - கற்பிட்டி பிரதான வீதியின் தல வில பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

இதில், கற்பிட்டி - கண்டல் குடாவை சேர்ந்த ஜலார் முஹம்மது ஜஸ்ரின் என்ற 20 வயது இளைஞரே உயிரிழந்தார்.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் கற்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் உயிரிழந்தார்.

# போதைப்பொருட்களுடன் ஒருநாளில் 526 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 21

நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் போதைப்பொருட்களுடன் 526 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலை வரையான 24 மணி நேரத்திலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்படி, ஹெரோயினுடன் 164 பேரும் ஐஸ் போதைப்பொருளுடன் 181 பேரும் கஞ்சாவுடன் 181 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 218 கிராம் 818 மில்லிகிராம் ஹெரோயின், 195 கிராம் 592 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 2 கிலோ 257 கிராம் 453 மில்லிகிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# வனவிலங்குகளால் ஏற்படுத்தப்படும் பயிரழிவை கட்டுப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 21

வனவிலங்குகளால் உணவு உற்பத்திக்கு (விவசாயம் மற்றும் பெருந்தோட்டத்துறை) ஏற்படும் சேதங்களை விஞ்ஞான பொறிமுறை ஊடாக முகாமை செய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் நிலையான தீர்வுகளை கண்டறிந்து நடைமுறைப்படுத்த ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் அரச அதிகாரிகள், நிபுணர்கள் அடங்கிய குழு நேற்று முன்தினம் முதன்முதலாகக் கூடியது.

வன விலங்குகளால் ஏற்படும் விவசாய சேதங்கள் குறித்து விஞ்ஞான ரீதியில் ஆய்வு மேற்கொண்டு, குறுகிய, மத்திய மற்றும் நீண்ட கால தீர்வுகளை செயல்படுத்துவதே இக்குழுவின் முக்கிய நோக்கமாகும்.

தேசிய கொள்கைகள் மற்றும் சட்டங்களை இயற்றுதல், அதற்குத் தேவையான மனித, பௌதிக மற்றும் நிதி வசதிகளை வழங்கும் நடவடிக்கை இந்தக் குழுவால் ஒருங்கிணைக்கப்படவுள்ளது.

வனவிலங்குகளை இயற்கையின் ஓர் அங்கமாக கருதி, முடிவுகளை எடுப்பதே சிறந்த வழிமுறை என்று இங்கு வலியுறுத்தப்பட்டது.

அதேபோன்று, வனவிலங்குகளுக்கான வன உரிமையை அங்கீகரித்து தீர்வுகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும், குறிப்பாக அதிக ஆபத்துள்ள மாவட்டங்களுக்கு விரைவான திட்டத்தை செயல்படுத்துவது குறித்தும் இந்தக் குழு கலந்துரையாடியது. (ஐ)

# துஷிதவுக்கு பிணை

கொழும்பு, ஜூன் 21

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லொலுவவுக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியது.

2 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீர பிணையில் அவர் விடுவிக்கப்பட்டார். அவர் வெளிநாடு செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

2017 -2019 காலப்பகுதியில் தேசிய லொத்தர் சபைக்கு சொந்தமான அரச சொத்துகளை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கடந்த 30ஆம் திகதி துஷித கைது செய்யப் பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாதுகாப்பு பிரதி அமைச்சருடன் அமெரிக்க அதிகாரி சந்திப்பு!



கொழும்பு, ஜூன் 21

இலங்கை அமெரிக்க தூதரகத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஆலோசகர் லெப். கேணல் மத்திவ் ஹவுஸ் பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவை (ஓய்வு) மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான நீண்டகால பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மையை மீண்டும் உறுதிப்படுத்த இந்த சந்திப்பு ஒரு வாய்ப்பாக அமைந்ததாகக் கூறப்பட்டது.

இதேவேளை, நாடு திரும்பவுள்ள முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் லெப். கேணல் அன்ரனி சி நெல்சனும் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தார். அவர் புதிய பாதுகாப்பு ஆலோசகரை பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கு அறிமுகம் செய்து வைத்ததுடன், தனது சேவை காலத்தின் போது வழங்கிய ஆதரவுக்கும் நன்றி தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கைதிகள்மீது தாக்குதல்

# ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 21

**பூஸா சிறைச்சாலையில் பொலிஸ் அதிரடி படையினர், சிறைச்சாலை அதிகாரிகள் கைதிகள் மீது தாக்குதல் நடத்துகின்றனர். இது தொடர்பில், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் முறைப்பாடு ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது என்று சிறை கைதிகளின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் சங்கத்தின் சுவேஸ் சந்திமால் தெரிவித்துள்ளார்.**

இதனிடையே, இந்த குற்றச்சாட்டை மனித உரிமைகள் பேரவையில் முன்வைப்பதற்காக அவர் ஜெனிவா சென்றுள்ளார்.

பொலிஸார், விசேட அதிரடிப் படையினரின் நடவடிக்கைகள், அவர்கள் கைதிகள் மீது நடத்தும் தாக்குதல்கள் தொடர்பாகவும் அங்கு அவர் சுட்டிக் காட்டுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 388 யானைகள், 155 மனிதர்கள் மோதலில் கடந்த ஆண்டு பலி!

### 35.8 கோடி ரூபாய் இழப்பீடு

கொழும்பு, ஜூன் 21

யானை - மனித மோதல்களால் கடந்த ஆண்டு 388 யானைகள், 155 மனிதர்கள் உயிரிழந்தனர் என்று சுற்றாடல் துறை பிரதி அமைச்சர் அன்ரன் ஜய கொடி தெரிவித்துள்ளார்.

அத்துடன், 13.95 கோடி ரூபாய் உயிரழப்புக்காகவும் 21.91 கோடி ரூபாய் சொத்து இழப்புகளுக்கும் நட்டஈடாக வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மொழி மூல கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், 2011ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புக்கு அமைவாக நாட்டில் 5 ஆயிரத்து 879 காட்டு யானைகள் இருப்பதாக பதியப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு குருவிகளை உள்ளடக்கியதாக செந்தரவு புத்தகம் வெளியிடப்பட்டது. 2012 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட செந்தரவு புத்தகத்தின் தரவுகளில் நாட்டில் காட்டு யானைகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

யானை - மனித மோதல்களை தடுப்பதற்கு தொழில்நுட்ப ரீதியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காட்டு விலங்குகளின் வாழிடங்களை பாதுகாப்பதற்கும் அவைக ளின் உணவு தேவைகளை நிறைவேற்றுவதற்கும் விசேட திட்டங்கள் வனவளத்துறை திணைக்களத்தால் மேற் கொள்ளப்பட்டுள்ளன - என்றார். (ஐ)

# ரியாலிட்டி ஷோ போன்றதே கோப் குழு என்கிறார் நாமல்



கொழும்பு, ஜூன் 21

“பொது நிறுவனங்களுக்கான குழு (கோப்) என்பது ஒரு ரியாலிட்டி ஷோ போன்றது”, இவ்வாறு விமர்சித்துள்ளார் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ.

பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், “என்பது ஒரு ரியாலிட்டி ஷோ போன்றது, ஏனெனில் அதற்கு எந்த தவறு செய்பவர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க அதிகாரம் இல்லை. ஆனால், அதன் கண்டுபிடிப்புகளை கொண்டு ஊடக நிகழ்ச்சிகளை மட்டுமே உருவாக்க முடியும். ஊழலைத் தடுக்க கோப் நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டது என்றும் அவர் சாடினார். (ஐ)

# அமெரிக்கா பலவீனமாவது இலங்கைக்கு நல்ல வாய்ப்பு

### அரசாங்கம் சொல்கிறது

கொழும்பு, ஜூன் 21

அமெரிக்கா பலவீனமடைந்து செல்வது இலங்கைக்கு பொருளாதார ரீதியாக நல்ல வாய்ப்பாகியுள்ளது என்று அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், அமெரிக்காவின் அதிகாரத்துவம் மலினப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் உலக அளவில் புதிய பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. இந்த வாய்ப்புகளை கொண்டு இலங்கை பலன்களை பெற்றுக்கொள்ள முடியும்.

உலகளவில் போர் இடம்பெற்று வருகிறது. மத்திய கிழக்கு வரையில் அது வியாபித்துள்ளது. உலகப் பொருளாதாரத்தில் இலங்கை வாய்ப்புகளை சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# 10,00 வரையான சிற்றூர்திகள் துறைமுகங்களில் தேக்கம்?

கொழும்பு, ஜூன் 21

இறக்குமதி செய்யப்பட்ட 700 முதல் 1000 வரையான சிற்றூர்திகள் கொழும்பு, அம்பாந்தோட்டை துறைமுகங்களிலிருந்து விடுவிக்கப்படாமல் தேங்கியுள்ளன என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் இந்திக்க சம்பத் மெரின்சிகே தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே இதனைத் தெரிவித்தார்.

இறக்குமதி - ஏற்றுமதி விதிமுறைகளின் கீழ் 2013ஆம் ஆண்டில் ஏப்ரல் 3 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் உள்ள சிக்கல்களே இதற்குக் காரணம் என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (ஐ)

# தம்பதியரை குளவி கொட்டியதில் கணவன் பலி மனைவி சிகிச்சையில்!

கொழும்பு, ஜூன் 21

குளவி கொட்டுக்கு இலக்காகி கணவர் உயிரிழந்தார். மனைவி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

அம்பாந்தோட்டை , அங்குனுகொல பெலெஸ்ஸ பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அதேஇடத்தை சேர்ந்த 69 வயது நபரே உயிரிழந்தார்.

கணவனும் மனைவியும் தென்னந்தோப்பில் தேங்காய் பறிக்கச் சென்றபோதே குளவி கூடு கலைந்து அவர்களை கொட்டியது.

இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் கணவர் உயிரிழந்தார். மனைவி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஐ)

# ஜூன் 30 - ஜூலை 5 வரை டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 21

எதிர்வரும் 30ஆம் திகதி முதல் ஜூலை 5ஆம் திகதி வரை விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, மாத்தளை, குருநாகல், மொனராகலை, கேகாலை, கண்டி, பதுளை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

நிலவும் மழையுடனான வானிலையால் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் பிரஷீலா சமரவீர தெரிவித்தார்.

அத்துடன், வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 26 ஆயிரத்து 986 பேர் டெங்கு காய்ச்சலுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 14 பேர் உயிரிழந்தனர் என்றும் அவர் கூறினார். (ஐ)



புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும்

ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இடம் பெறுகின்ற தவறுகளுக்கு எதிரான

## மாபெரும் மக்கள் எழுச்சிப் போராட்டம்!

• காலம் : 21- 06- 2025 • நேரம் : காலை 10 மணி முதல் • இடம் : ஆலய முன்றலில்

எமது அன்புக்குரிய தீவுப்பகுதி மக்களே!

சமூகத்தில் பெருமதிப்புக்குரிய ஆன்றோர்களும், சான்றோர்களும் அங்கம் வகித்த ஆலய நிர்வாக சபையானது தற்போதைய காலகட்டங்களில் பொறுப்பற்ற நபர்களால் நிர்வகிக்கப்பட்டு எமது ஆலயத்தினதும் எமது புங்குடுதீவு மக்களினதும் கீர்த்திக்கும், புகழுக்கும் பங்கம் விளைவிக்கப்படுகிறது.

மேற்படி நிர்வாக சபை தலைமையின் தவறான செயல்களான: -

- ஆலய புனித தன்மையை பேணாமல் நடத்தல்.
- ஆலய பக்தர்களை சமமாக மதிக்காமல் நடத்தல்.
- ஆலய அயலில் வசிக்கும் மக்களுக்கு அன்னதான உணவை கொடுக்க மறுத்தல்.
- ஆன்மா லயப்படும்( அமைதி ) ஆலயத்தை வியாபார நிலையமாக மாற்றியமை.
- மாதாந்தம் அளவுக்கு அதிகமாக வீண் செலவுகளை செய்தல்.
- ஆலய திருட்டு சம்பவங்களை மூடி மறைத்தல் மற்றும் உடந்தையாக இருத்தல்.
- தங்களுக்கு சார்பாக முக்கியமான இடங்களில் கண் காணிப்பு கேமராக்களை பொருத்தாமல் தவிர்த்தல்.
- பிரதான திருவிழாக்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு கோராமல் திருட்டு சம்பவங்களுக்கு இடமளித்தல்.
- ஆலய திருவிழாக்களுக்கு அதிகமாக ,முறைகேடாக பணம் வசூலித்தல்.
- மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் தவிர்த்தல்.
- பொறுப்பு வாய்ந்த அரசாங்க அதிகாரிகளின் அழைப்புக்களை உதாசீனம் செய்தல்.
- பொதுமக்களின் பணத்தை பெற்று பல வருடங்களாக கணக்கு காட்டாமல் தவிர்த்தல்.
- ஆலய யாப்பை மீறி ஒரு குடும்பத்தில் இருவர் பதவி வகித்தல். புங்குடுதீவில் நடாத்தவேண்டிய கூட்டங்களை ஆலய யாப்பினை மீறி தமக்கு சாதகமாக கொழும்பில் நடாத்துதல்.
- பொதுக் கூட்டத்தை நடாத்தாமல் தவிர்த்தல்.
- தவறுகளை சுட்டிக்காட்டி நீதி கோரிய ஏனைய அங்கத்தவர்கள் மீது வழக்கு பதிவு செய்து பிரசித்தி பெற்ற எமது ஆலயத்திற்கு அவதூறு ஏற்படுத்தியமை.

ஆகிய மேற்படி தவறான நடவடிக்கைகளுக்கு எதிராக தீவுப்பகுதி மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றாக அணிதிரண்டு எமது எதிர்ப்பை தெரிவிப்போம். அன்னை கண்ணகியின் ஆலயத்தில் ஒன்று கூடுவதால் நாம் அனைவரும் எமது தமிழ் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையிலான ஆடைகளை அணிந்து அமைதியாக போராடுவோம்.

இவ்வண்ணம்
கண்ணகை அம்மன் அடியார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# கதிர்காமம் பாதயாத்திரைக்கான காட்டுப்பாதை நேற்றுத் திறப்பு

## ஒரே நாளில் 4000 பக்தர்கள் பயணம்







**காரைதீவு, ஜூன் 21**

**வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடி வேல் விழா உற்சவத்தையொட்டிய கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை நேற்று வெள்ளிக் கிழமை அதிகாலை 05.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. கிழக்கு மாகாண ஆளுநர், பேராசிரியர் நந்தலால் ஜயசேகர பூக்கம்பம் வெட்டி கானகப் பாதைக்கான கதவை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.**

வரலாறு காணாத வகையில் இம்முறை சுமார் 4000 இற்கும் மேற்பட்ட அடியவர்கள் முதல் நாளிலேயே காட்டுக்குள் பிரவேசித்துள்ளனர்.

இந்து சமய கலாசார முறைப்படி மூன்றாவது தடவையாக கழுகுமலைப் பத்து பாடி பிரதம குரு சிவ சிறீ க. கு.சீதாராம் குருக்கள் பஞ்சாராத்தி காட்டியதும் கானகப்பாதைக் கதவு திறந்து வைக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 04.00 மணிக்கு உகந்தை மலை முருகன் ஆலயத்தில் பிரதம குரு சீதாராம் குருக்கள் விசேட பூஜை நடத்தி ஆசியுரை வழங்கினார்.

காலை 05.30 மணியளவில் குமண சரணாலய நுழைவாயிலில் காட்டுப் பாதை சம்பிரதாய பூர்வமாக திறக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன், கிழக்கு மாகாண கலாசார பணிப்பாளர் எஸ்.பார்த்தீபன், லாகுகலை பிரதேச செயலாளர் என். நவநீதராஜா, கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரிஜே. அதிசயராஜ், பொத்துவில் உதவி பிரதேச செயலாளர் கே. இராமக்குட்டி, முன்னாள் மாகாண கலாசார பணிப்பாளர் ச. நவநீதன், மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கே. ஜெயராஜி, ஆலய காதிர்காமம் முருகன் ஆலய வண்ணக்கர் சுது நிலமே திஸநாயக்க , காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கி. ஜெயசிறில், இந்து சமய செயல்பாட்டாளர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பித்த சி. ஜெயராசா (ஜெயாவேல்சாமி) தலைமையிலான பாதயாத்திரை குழுவினர் உள்ளிட்ட 4 ஆயிரம் அடியார்கள் கலந்து கொண்டனர்.

கதிர்காமம் காட்டுப் பாதை மொத்தம் 56 மைல்கள் ஆகும்.

சுமார் 6 நாட்கள் இந்த காட்டுப் பயணத்தை அடியார்கள் மேற்கொள்வது வழமை.

நேற்று 20ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட காட்டுப் பாதை யூலை 04 ஆம் திகதி மூடப்படுகிறது.

கதிர்காமம் கொடியேற்றம் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது.

(எ-01-08)

# சர்வதேச யோகா தின நிகழ்வு

திருகோணமலை, ஜூன் 21

சர்வதேச யோகா தினத்தையொட்டி சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, ஆயுள்வேத திணைக்களம் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயத்துடன் இணைந்து "ஒரு பூமி, ஒரு ஆரோக்கியத்துக்கான யோகா" எனும் தொனிப் பொருளில் யோகா தின பயிற்சி நிகழ்வுகள் நேற்று முன்தினம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கமைய கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் எம். ஏ. நபிலின் வழிகாட்டலின் கீழ், திருகோணமலை கோபாலபுரம் மாவட்ட ஆயுள்வேத வைத்திய சாலையின் அத்தியட்சகர் என். நிறஞ்சன் தலைமையில் கோபாலபுரம் மாவட்ட சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் யோகா தின நிகழ்வு நடைபெற்றது.

யோகா பயிற்சியை செய்வதன் மூலம் எமது உடலில் ஏற்படுகின்ற பல தொற்றா நோய்களுக்கு சிறந்த தீர்வுகள் கிடைக்கின்றன. இப்பயிற்சியை தினமும் கடைப்பிடித்து செய்வோமாக இருந்தால் எமது உடல் ஆரோக்கியத்தையும், தொற்றா நோயின் தாக்கத்திலிருந்தும் எம்மை பாதுகாத்துக்கொள்ளலாம் என்று மருத்துவர் நிறஞ்சன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மருத்துவர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ)

# சமூக சேவை உத்தியோகத்தர் நியமனம் தொடர்ந்து இழுபறி

## மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் முறையீடு

கல்முனை, ஜூன் 21

சமூக சேவை உத்தியோகத்தர் நியமனம் நீண்ட காலமாக இடம்பெறவில்லை எனத் தெரிவித்து சமூக சேவை உத்தியோகத்தர் தொழிற்சங்கம் நேற்று முன்தினம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டிருந்தது.

கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸை சந்தித்து சமூக சேவை உத்தியோகத்தர் தொழிற்சங்கத்தின் பொது செயலாளர் ஏ. ஜீ. அர்ஸாத் தொழிற்சங்க உயர்பீட உறுப்பினர் ஏ. அஹமட் சபீர் ஆகியோர் முறைப்பாட்டை வழங்கினர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.ஜீ. அர்ஸாத், சமூக சேவை உத்தியோகத்தர் சேவை என்பது சமூகத்தில் நலிவடைந்த மக்களின் அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்யும் அத்தியாவசிய பணிகளை ஆற்றிவரும் மிகமுக்கியமான சேவையாகும். ஆனாலும், இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு 2016 ஆம் ஆண்டுக்கு பின்னர் நடைபெறாமையால் கிழக்கு மாகாணத்தில் உள்ள 44 பிரதேச செயலகங்களில் 21 பிரதேச செயலகங்களில் வெற்றிடம் ஏற்பட்டு எமது பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பல முறைப்பாடுகளை எமது தொழிற்சங்கம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கியும் கூட அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையை அடுத்து குறித்த தொழிற்சங்கம் கல்முனை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளது.- என்றார்.

(எ-01)

# சிறுவர் பாதுகாப்பு குறித்து விசேட பயிற்சி பட்டறை

மூதூர், ஜூன் 21

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் கல்வி அமைச்சும் இணைந்து முன்னெடுக்கும் பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழு வேலைத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான சான்றிதழ் வழங்குதல் மற்றும் அதிபர்களுக்கான பயிற்சி கருத்தரங்கு நேற்று முன்தினம் திருகோணமலை, மூதூர் பிரதேச செயலாளர் எம். முபாரக் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மூதூர் வலயக்கல்வி பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஹாபிஸ், முறைசாரா கல்விப் பிரிவு உதவிக் கல்வி பணிப்பாளர் ஜஹார், மாவட்ட செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் ஆகியோரின் பங்குபற்றலுடன் மூதூர் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மு. சாபி ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில், வளவாளராக கலந்து கொண்ட மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் மு. ஸம்ஸித், சிறுவர் பாதுகாப்பு குழுவின் செயல்பாடுகள், நடைமுறைப் படுத்துவதில் அதிபர்களின் வகிபாகம் போன்ற பல விடயங்கள் குறித்து தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன.

(எ)

# மரக்கறி விற்பனை போர்வையில் போதைப்பொருட்கள் விற்பனை!

## சந்தேக நபர் தொடர்பில் விசாரணை

கல்முனை, ஜூன் 21

மரக்கறி விற்பனை போர்வையில் போதைப் பொருட்களை சூட்சுமமாக விற்பனை செய்த குற்றச்சாட்டின் அடிப்படையில் கைதான சந்தேக நபர் தொடர்பில் நிந்தவூர் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியில் தற்காலிக மரக்கறி விற்பனை நிலையம் எனும் போர்வையில் சூட்சுமமாக போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் கடந்த 18 ஆம் திகதி புதன்கிழமை விசேட சோதனை நடவடிக்கை அப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டவர் தன்னைக் கைது செய்ய பொலிஸார் முயற்சிப்பதை கண்டு அருகில் உள்ள வயல்வெளிக்குள் தப்பியோடியுள்ளார். எனினும், புலனாய்வுப் பிரிவினரும் பொலிஸ் அதிகாரிகளும் இணைந்து கடும் சிரமத்துடன் சந்தேக நபரை பின் தொடர்ந்து கைது செய்தனர்.

அத்துடன் குறித்த மரக்கறி விற்பனை செய்யும் கடையிலிருந்து போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் நிந்தவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-01)

# பண்பாட்டலுவல்கள் திணைக்கள புதிய பணிப்பாளராக பார்த்தீபன்

திருகோணமலை, ஜூன் 21

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக இலங்கை நிர்வாக சேவை அதிகாரி சூ. பார்த்தீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.




இதற்கு முன்னர் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக இவர் பணியாற்றியிருந்தார்.

(எ-04)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் மருத்துவமனை மீது ஈரான் ஏவுகணை தாக்குதல்

## பிரதமர் நெதன்யாகு எச்சரிக்கை



டெல்அவிவ், ஜூன் 21

**இஸ்ரேலின் பெர் செவா பகுதியில் உள்ள சொரோகா மருத்துவமனை மீது ஈரான் நேற்று முன்தினம் ஏவுகணை வீசி தாக்குதல் நடத்தியது. இதில் மருத்துவமனை கட்டடம் பலத்த சேதமடைந்தது. பலர் காயமடைந்தனர்.**

ஈரானின் அராக் நகரில் உள்ள அணு உலை கடின நீர் ஆலை மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதால், இஸ்ரேலின் முக்கிய மருத்துவமனை மீது ஈரான் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. இஸ்ரேல் - ஈரான் இடையேயான போர் நேற்று 8ஆவது நாளாக தொடர்ந்தது. ஈரானின் அராக் நகரில், அணு உலையில் பயன்படுத்தப்படும் கடின நீர் தயாரிப்பு ஆலை உள்ளது. அங்கு தாக்குதல் நடத்தப்போவதால், அருகில் வசிக்கும் மக்களை வெளியேறும்படி இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில், அராக் நகரின் கடின நீர் ஆலை மீது இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று முன்தினம் காலை குண்டுகளை வீசின. இந்த ஆலையை ஈரான் ஏற்கனவே காலி செய்திருந்தது. இதனால் இங்கு அதிக பாதிப்புகள் ஏற்படவில்லை. கதிர்வீச்சு கசிவு அபாயமும் ஏற்படவில்லை.

இது குறித்து இஸ்ரேல் இராணுவம் கூறுகையில், "அணு ஆயுத தயாரிப்புக்கு, அணு உலைகளை பயன்படுத்துவதை தடுப்பதற்காக இங்கு தாக்குதல் நடத்தினோம். ஈரானின் நடான்ஸ் பகுதியில் உள்ள மற்றொரு அணுசக்தி மையம் தொடர்பான இடத்திலும் தாக்குதல் நடத்தினோம்"- என்று குறிப்பிட்டுள்ளது.

இதற்கு பழிவாங்கும் வகையில் தெற்கு இஸ்ரேலில் உள்ள சொரோகா மருத்துவ மையம் மீது ஈரான் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது.

இந்த மருத்துவமனை 1000 படுக்கைகள் கொண்டு முக்கிய மருத்துவமனையாக செயல்பட்டு வந்தது. ஏவுகணை தாக்குதலில் மருத்துவமனையின் பல பகுதிகள் சேதமடைந்தன. இதனால், மருத்துவமனை மூடப்பட்டது.

இஸ்ரேலில் மருத்துவமனை மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, "இஸ்ரேலில் பல மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால், மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்கள் எல்லாம் அடித்தளத்தில் வாகன நிறுத்தும் இடங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தத் தாக்குதலுக்கு ஈரானின் கொடுங்கோல் ஆட்சியாளர்கள் அதிக விலை கொடுப்பர்" -என்றார். (எ)

# ஈரானில் இதுவரை 639 பேர் உயிரிழப்பு

## 2000 பேர் படுகாயம், 20 அணு சக்தி தளங்கள், 16 எண்ணெய் வயல்கள் முற்றாக அழிப்பு

தெஹ்ரான், ஜூன் 21

இஸ்ரேல் விமானப் படைத் தாக்குதலில் ஈரானில் இதுவரை 639 பேர் உயிரிழந்தனர். 2000இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். ஈரானின் முக்கிய அணு சக்தி தளங்கள், எண்ணெய் வயல்களும் அழிந்தன.

கடந்த 13ஆம் திகதி அதிகாலை ஈரான் மீது இஸ்ரேல் விமானப் படை திடீர் தாக்குதல் நடத்தியது. இரு நாடுகளிடையே 8ஆவது நாளாக நேற்றும் போர் நீடித்தது. கடந்த 8 நாட்களில் ஈரான் தலைநகர் தெஹ்ரான் உட்பட அந்த நாட்டின் 1100 இடங்கள் மீது இஸ்ரேல் போர் விமானங்கள், ட்ரோன்கள் தாக்குதல் நடத்தியுள்ளன. குறிப்பாக ஈரானின் அணு சக்தி தளங்கள், ஆயுத உற்பத்தி ஆலைகள், எண்ணெய் வயல்கள் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இதில், ஈரானின் 20 அணுசக்தி தளங்கள், 16 எண்ணெய் வயல்கள் முற்றாக அழிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈரானின் போர்டோ நகரில் மலைக்கு கீழே சுமார் 90 மீற்றர் ஆழத்தில் அந்த நாட்டின் மிக முக்கிய அணுசக்தி தளம் செயல்படுகிறது. இந்தத் தளம் மீது இஸ்ரேல் விமானப் படை தாக்குதல் நடத்தியது. ஆனால், அதனை அழிக்க முடியவில்லை.

அமெரிக்க இராணுவத்தால் மட்டுமே பூமியை துளைத்து போர்டோ அணுசக்தி தளத்தை அழிக்க முடியும் என்று கூறப்படுகிறது. இஸ்ரேல் தாக்குதலில் ஈரான் இராணுவத்தின் 11 மூத்த தளபதிகள் கொல்லப்பட்டனர். ஈரான் முழுவதும் 154 இராணுவத்தினர் உட்பட 639 பேர் உயிரிழந்தனர். 2000இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். தலைநகர் தெஹ்ரான் சீர்குலைந்துள்ளது. பெரும்பாலான மக்கள் தலைநகரை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

தெஹ்ரானில் உள்ள இராணுவத் தலைமையகங்கள், அணு சக்தி தளங்கள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள எண்ணெய் வயல்கள் தீப்பிடித்து எரிகின்றன. இஸ்ரேல் போர் விமானங்கள், ட்ரோன்கள், ஏவுகணைகள் பெரும்பாலும் தலைநகர் தெஹ்ரானை குறிவைத்தே தாக்குதலை நடத்தி வருகின்றன. இராணுவ ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் ஈரானுக்கு மிகப்பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கிறது. (எ)

# இஸ்ரேலிலிருந்து அமெரிக்க தூதரக அதிகாரிகள் வாபஸ்

வாஷிங்டன், ஜூன் 21

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான மோதல் தீவிரமடைந்து வருவதால் இஸ்ரேலில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திலிருந்து அத்தியாவசியமற்ற அதிகாரிகளை திரும்ப அழைக்கும் பணியை அந்த நாடு தொடங்கியுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, இஸ்ரேலிய அமெரிக்க தூதரகத்தில் கூடுதலாக பணியாற்றி வந்த தூதுவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை விமானம் மூலம் வெளியேற்ற அமெரிக்க வெளியுறவுத் துறை கடந்த புதன்கிழமை நடவடிக்கை எடுத்தது.

எத்தனை தூதரக அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் விமானத்தில் கொண்டு செல்லப்பட்டனர் என்பது குறித்த தகவல் இல்லை. இதேபோன்று, தரைவழியாக ஜோர்டான் மற்றும் எகிப்து நாடுகளுக்கு சென்ற அமெரிக்கர்களின் எண்ணிக்கை குறித்தும் தெரியவில்லை.

இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதுவர் மைக் ஹக்கபி எக்ஸ் தளத்தில் அமெரிக்க மக்களை வெளியேற்ற விமானம் மற்றும் கப்பல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிப்பதற்கு சற்று முன்னதாகவே அமெரிக்க மீட்பு விமானம் இஸ்ரேலில் தரையிறங்கி விட்டது என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

ஈரான் - இஸ்ரேல் மோதல்

# இரகசிய தகவல்களை பரிமாற ரஷ்யா-சீனா இடையே ஒப்புதல்

மொஸ்கோ, ஜூன் 21

இரகசிய தகவல்களை பரிமாறிக் கொள்ள ரஷ்யா - சீனா இடையே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ரஷ்யாவின் வெளிவிவகார கொள்கைக்கான உதவியாளர் யூரி உஷாகோவ் நேற்று கூறும்போது, சீனா மற்றும் ரஷ்யாவின் தலைவர்கள் தொலைபேசி வழியே தொடர்பு கொண்டு நீண்ட நேரம் ஆலோசித்தனர்.

தொடர்ந்து அவர், சர்வதேச சட்டத்தின் விதிகளை மீறிய இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு இரு நாடுகளின் தலைவர்களும் கடுமையாக கண்டனம் தெரிவித்துள்ளனர். இந்த விவகாரத்தில் அவர்கள் இருவரும் ஒரே நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.

ஜனாதிபதி புடின் மற்றும் ஜின்பிங் இருவரும் பல மணிநேரம் தொலைபேசி வழியே தொடர்பு கொண்டு ஆலோசனை மேற்கொண்டனர். அப் போது, ஈரான் மற்றும் இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளின் தகவலை பற்றி பகிர்ந்து கொள்ள ஏதுவாக, தங்களுடைய தொடர்புடைய அமைப்புகளுக்கு உத்தரவுகளை பிறப்பிப்பது என ஒப்பு கொண்டனர் -என்றார். இதனால், ஈரான் மற்றும் இஸ்ரேல் நாடுகளிடையேயான மோதல் தொடர்பான இரகசிய தகவல்களை இவ்விரு நாடுகளும் பரிமாறிக் கொள்ள முடிவு செய்துள்ள தகவல் வெளிவந்துள்ளது.

# 3ஆம் உலகப்போர் மூளும் அபாயம்

மொஸ்கோ, ஜூன் 21

இஸ்ரேல் - ஈரான் இடையே நீடிக்கும் போரால் மூன்றாம் உலகப் போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, ஈரான் மீது அமெரிக்கா போர் தொடுத்தால் மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று ரஷ்யா பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளது. சக்திவாய்ந்த அணு குண்டுகளைத் தயாரிக்க ஈரான் தீவிர முயற்சி செய்து வருவதாக மேற்கத்திய நாடுகள் நீண்ட நாட்களாக குற்றஞ்சாட்டி வருகின்றன. தற்போது 87 சதவீதம் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஈரான் வைத்திருப்பதாகவும் இதை 90 சதவீதம் செறிவூட்டினால் அணு குண்டுகளைத் தயாரிக்க முடியும் என்றும் சர்வதேச அணு சக்தி நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இதனிடையே ரஷ்ய வெளிவிவகாரத் துறைதுணை அமைச்சர் செர்ஜி ரயாப்கோவ், மொஸ்கோவில் நேற்று நிருபர்களிடம் கூறும்போது, ஈரானுக்கு எதிராக அமெரிக்கா போர்தொடுத்தால் மிக மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று தெரிவித்தார். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கூறும்போது, "ஈரான் - இஸ்ரேல் இடையே போர் நிறுத்தத்தை ஏற்படுத்த சமரச பேச்சுக்கள் நடத்த ரஷ்யா தயாராக உள்ளது.எங்களது சமரச திட்டத்தை ஈரான் - இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவிடம் விளக்கியுள்ளோம். ஈரான் - ரஷ்யா இடையே பொருளாதார, இராணுவ ரீதியாக மிக நெருங்கிய உறவு நீடிக்கிறது"- என்று தெரிவித்தார். (எ)

# சர்வதேச சட்டவிதிகள் மீறல் சீனா வேடிக்கை பார்க்காது

## அமெரிக்காவுக்கு எச்சரிக்கை

பீஜிங், ஜூன் 21

"ஈரான் மீது அமெரிக்கா போர் தொடுத்தால் சீனா மிகக் கடுமையாக எதிர்க்கும். சர்வதேச சட்டவிதிகள் மீறப்படுவதை நாங்கள் வேடிக்கை பார்க்க மாட்டோம்"என்று சீன வெளிவிவகாரத் துறை செய்தித் தொடர்பாளர் குவோ ஜியாகுன் தெரிவித்தார். பீஜிங்கில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதேவேளை,

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கூறும்போது, "ஈரான் - இஸ்ரேல் இடையிலான போரில் அமெரிக்கா தலையிடக்கூடாது" என்று பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தார்.

இதனிடையே வட அமெரிக்க நாடான வெனிசூலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ கூறும்போது, "ஈரானுக்கு ரஷ்யா, சீனா, துருக்கி, பெர்சிய வளைகுடா கூட்டமைப்பு, இஸ்லாமிய நாடுகள், குளோபல் சவுத் நாடுகள் பகிரங்கமாக ஆதரவு அளிக்க வேண்டும். அப்போது தான் இஸ்ரேலின் அத்துமீறல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்"-என்று அழைப்பு விடுத்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் இன்னிங்ஸில் 485 ஓட்டங்கள் பங்களாதேஷ்க்கு இலங்கை பதிலடி

காலி, ஜூன் 21

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 485 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இலங்கை - பங்களாதேஷ் இடையிலான 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலாவது போட்டி காலியில் நடைபெற்று வருகிறது.

இதில், முதல் இன்னிங்ஸில் 153. 4 ஓவர்களில் 495 ஓட்டங்கள் குவித்த நிலையில் பங்களாதேஷ் அணி சகல விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக முஷ்பிகுர் ரஹீம் 163 ஓட்டங்களும் அணித் தலைவர் ஷாண்டோ 148 ஓட்டங்கள் அடித்து அசத்தினர். இலங்கை தரப்பில் அஷித பெர்னாண்டோ, மிலன் ரத்நாயக்க, தாரிந்து ரத்நாயக்க தலா 3 விக்கெட்கள் கைப்பற்றினர்.

இதனையடுத்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை சிறப்பாக துடுப்பாட்டம் செய்து பங்களாதேஷ் அணிக்கு பதிலடி கொடுத்தது. தொடக்க ஆட்டக்காரரான பதும் நிஸ்ஸங்க அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணிக்கு வலுச்சேர்த்தார்.


தினேஷ் சந்திமால் தனது பங்குக்கு 54 ஓட்டங்களும் மத்தியூஸ் 39 ஓட்டங்களும் அடித்த நிலையில் ஆட்டமிழந்தனர். மறுமுனையில் சிறப்பாக விளையாடி வந்த நிஸ்ஸங்க இரட்டைச் சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 187 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

3ஆம் நாள் முடிவில் இலங்கை அணி 4 விக்கெட்களை இழந்து 368 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கமிந்து




மெண்டிஸ் 37 ஓட்டங்களுடனும் தனஞ்சய டி சில்வா 17 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்த நிலையில் நேற்று நாளாவது நாள் ஆட்டம் நடைபெற்றது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 485 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதனால், பங்களாதேஷ் அணி 10 ஓட்டங்கள் முன்னிலையுடன் துடுப்பெடுத்தாடி வருகிறது. (எ)



# பெர்லின் ஓபின் ரென்னிஸ் ரைபகினா அபார ஆட்டம்

பெர்லின், ஜூன் 21

பெர்லின் ஓபின் ரென்னிஸ் தொடரில் ரைபகினா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் மட்டும் பங்கேற்கும் பெர்லின் ஓபின் ரென்னிஸ் தொடர் ஜேர்மனியில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் கஜகஸ்தானின் முன்னணி வீராங்கனையான எலினா ரைபகினா, செக் குடியரசின் கேட்டரினா சினியாகோவாவுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்க முதலே அபாரமாக செயல்பட்ட ரைபகினா 6-4, 7-6 (7-5) என்ற செற் கணக்கில் கேட்டரினா சினியாகோவாவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். (எ)

# "இந்திய அணியை எளிதாக நாம் நினைக்கமாட்டோம்"



லீட்ஸ், ஜூன் 21

இந்திய அணியை நாம் எளிதாக நினைக்கமாட்டோம் என்று இங்கிலாந்து அணியின் தலைவர் பென் ஸ்டோக்ஸ் தெரிவித்தார்.

சுப்மன் கில் தலைமையிலான இளம் வீரர்களை கொண்ட இந்திய அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இந்தத் தொடரின் முதல் போட்டி லீட்சில் நேற்றுத் தொடங்கியது. தற்போது நடைபெறும் டெஸ்ட் போட்டி முந்தைய போட்டிகளை விட சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

ஏனெனில் அனுபவம் வாய்ந்த வீரர்கள் இல்லாத இந்திய அணி, பலம் வாய்ந்த இங்கிலாந்து அணியை எதிர்கொள்கிறது. இந்தத் தொடர் குறித்து இங்கிலாந்து பென் ஸ்டோக்ஸ் கூறுகையில்,

இந்திய அணியில் ரோஹித் சர்மா, விராட் கோலி, ஆர். அஸ்வின் ஆகியோர் இல்லாதது குறித்து நிறைய விவாதித்து விட்டோம். இந்த மூன்று அனுபவ வீரர்கள் இல்லாததால் இந்திய அணியை எளிதாக வீழ்த்தி விட முடியும் என்று நாங்கள் நினைக்கமாட்டோம். அவர்களது இடத்தை நிரப்பக்கூடிய அளவுக்கு இந்தியாவில் நிறைய திறமையான வீரர்கள் உள்ளனர்.

இந்திய வேகப்பந்து வீச்சாளர் பும்ராவின் திறமையையும், அவர் அணிக்குள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர் என்பதையும் நாங்கள் அறிவோம். ஆனால், அவரது பந்து வீச்சை கண்டு அச்சப்படுகிறீர்களா? என்று கேட்டால் நிச்சயம் இல்லை- என்றார். (எ)

# ஜன்னிக் சின்னெர் அதிர்ச்சி தோல்வி

பெர்லின், ஜூன் 21


ஹாலே ஓபின் ரென்னிஸ் தொடரில் ஜன்னிக் சின்னெர் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.


பல முன்னணி வீரர்கள் கலந்து கொண்டுள்ள ஹாலே ஓபின் ரென்னிஸ் தொடர் ஜேர்மனியில் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான இத்தாலியின் ஜன்னிக் சின்னெர் கஜகஸ்தானின் அலெக்சாண்டர் பப்ளிக் உடன் மோதினார்.

இந்த ஆட்டத்தின் முதல் செற்றை 6-3 என்ற புள்ளிக் கணக்கில் சின்னெர் கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற அடுத்த செற்களில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய அலெக்சாண்டர் பப்ளிக் 6-3, 6-4 என்ற செட் கணக்கில் ஜானிக் சின்னெருக்கு அதிர்ச்சி அளித்தார்.

இறுதியில் அலெக்சாண்டர் பப்ளிக் 3-6, 6-3, 6-4 என்ற செற் கணக்கில் ஜன்னிக் சின்னெரை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். தோல்வி கண்ட ஜன்னிக் சின்னெர் தொடரிலிருந்து வெளியேறினார். (எ)





# ஹாலே ஓபின் ரென்னிஸ் காலிறுதியில் ஸ்வேரெவ்

பெர்லின், ஜூன் 21

ஹாலே ஓபின் ரென்னிஸ் தொடரில் ஸ்வேரெவ் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பல முன்னணி வீரர்கள் கலந்து கொண்டுள்ள ஹாலே ஓபின் ரென்னிஸ் தொடர் ஜெர்மனியில் நடைபெற்று வரு கிறது.

இந்தத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வேரெவ் இத்தாலியின் லோரென்சோ சோனெகோ உடன் மோதினார்.

இந்தப் போட்டியின் முதல் செற்றை 3-6 என்ற புள்ளிக்கணக்கில் இழந்த ஸ்வேரெவ், ஆட்டத்தின் அடுத்த இரு செற்களை, அபாரமாக செயல்பட்டு 6-4, 7-6 (7-2) என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றினார்.

இறுதியில் இந்த ஆட்டத்தில் 3-6, 6-4, 7-6 (7-2) என்ற செற் கணக்கில் லோரென்சோ சோனெகோவை வீழ்த்திய ஸ்வேரெவ் காலிறுதிக்கு முன்னேறினார். (எ)

# ஆர். சி. பி. அணியினர்மீது பொலிஸில் முறைப்பாடு

பெங்களூரு, ஜூன் 21

ஐ. பி. எல். கிரிக்கெட் இறுதிப் போட்டியில் பெங்களூரு அணி சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெங்களூரு சின்னச்சாமி கிரிக்கெட் மைதானத்தில் கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற ஆர். சி. பி. அணியின் வெற்றிக் கொண்டாட்டத்தில் கூட்ட நெரிசல் ஏற்பட்டு 11 பேர் பலியாகினர். இது தொடர்பில் கப்பன் பார்க் பொலிஸ் நிலையத்தில் சமூக ஆர்வலரான டி. ஜே. ஆபிரகாம் பரபரப்பு புகார் அளித்துள்ளார். 11 பேர் பலியாக காரணமான முதலமைச்சர் சித்தராமையா, துணை முதலமைச்சர் டி. கே. சிவக்குமார் ஆகியோர் மீதும் ஆர்.சி.பி. அணி நிர்வாகம், கர்நாடக கிரிக்கெட் சங்கம் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்க அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுதவிர தலைமை செயலாளர் ஷாலினி ரஜனீஷ், முன்னாள் பொலிஸ் ஆணையர் தயானந்த், ஐ.பி.எஸ். அதிகாரிகள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கும்படி டி.ஜே. ஆபிரகாம் தான் அளித்த புகாரில் தெரிவித்திருந்தார். இந்த முறைப்பாட்டை பொலிஸார் பெற்றுக் கொண்டனர். பின்னர் டி. ஜே. ஆபிரகாம் செய்தியாளர்களுக்கு கூறுகையில்,

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் இறுதிப் போட்டி தொடங்குவதற்கு முன்பாக ஆர்.சி.பி. அணிக்கான வெற்றிக் கொண்டாட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுபற்றி பொலிஸாரிடமும் அனுமதி கேட்டுள்ளனர். இதன்மூலம் ஆர்.சி.பி. அணி சம்பியன் கிண்ணத்தை வெல்ல சூதாட்டத்தில் ஈடுபட்டு இருப்பது தெரியவந்துள்ளது. இதுபற்றி இந்திய கிரிக்கெட் சபையிடமும் புகார் அளிப்பேன். 11 பேர் பலியான விவகாரத்தில் முதலமைச்சர், அரசு அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். 11 பேர் பலி விவகாரத்தில் சட்டம் என்ன செய்யும் எனக் காட்டுவேன் - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி

குழுவின் ஏற்பாட்டில் நேற்று காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணம்-நல்லூர் வளைவுக்கு அருகில் செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரிப் போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டு நீதி கோரிக் கோஷங்களை எழுப்பினர்.

போராட்டம் இடம்பெற்ற பகுதியில் வீதிப் போக்குவரத்துப் பாதுகாப்புக் கடமைகளுக்கு எனப் பொலிஸார் அதிகளவில் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நாமலை...

இதன்போது அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எனது அப்பாவைக் கொலை செய்த நாமல் ராஜபக்ஷவை நான் கொலை செய்யவேண்டும் என ஒரு காலத்தில் நினைத்துக்கொண்டிருந்தேன். இன்று போய் அவரிடம் அழகாகக் கதைத்தேன். அந்தளவு பகை எனது இதயத்திலிருந்தது.

நான் சிறுவயதாக இருந்தபோது சிங்கள மக்கள் என்பவர்கள் பேய்போல என்று கூறினார்கள். சிங்களவர்கள் ஏனைய மக்களின் வயிற்றைப் பிளந்து சாப்பிடுபவர்கள் எனக் கூறினார்கள்.

அந்த காலத்தில் சிங்களவர்களைக் கண்டதில்லை, சிங்களம் புரியாது, அவர்களுடன் பழகியதும் இல்லை. அதனால் சிங்களவர்கள் தவறானவர்கள் என நினைத்துக் கொண்டிருந்தோம். சிங்களவர்களிடம் தமிழர்கள் எல்லோரும் புலிகள் எனக் கூறியிருந்தார்கள். இப்போது இது அத்தனையையும் முழுமையாக மாற்றியுள்ளோம் - என்றார். (அ)

## தமிழ் மக்களின்...

தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

இலங்கையில் வாழ முடியாது என்ற மனோ நிலை எமது இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இதனால் கல்வி மற்றும் வேலைகளுக்காக வெளிநாடு செல்லவேண்டும் என்ற நிலையில் இவர்கள் உள்ளனர்.

மறுபுறத்தில், பிறப்புவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. 1981 காலப்பகுதியில் 8 இலட்சத்துக்கு மேல் இருந்த யாழ். மாவட்ட சனத்தொகை தற்போது 6 இலட்சம் வரைதான் உள்ளது.

முன்னர் 11 எம்.பி.க்கள் இருந்தனர். இன்று யாழ்.மாவட்டத்தில் ஆறு எம்.பி.க்களே தெரிவாகின்றனர். அடுத்த தேர்தலின்போது இது மேலும் குறைவடையக்கூடும். ஏனெனில் புலம்பெயர்வு அதிகரித்துள்ளது.

வடக்கை முன்னேற்றுவதுபற்றி, விவசாயம் உள்ளிட்ட தொழில்துறைகளை மேம்படுத்துவது பற்றி கடந்த காலங்களில் கவனம் செலுத்தப்படாமையும் இளைஞர்கள் மத்தியில் அதிருப்தி உருவாக காரணமாக அமைந்தது.

இந் நிலைமையை மாற்றியமைக்கவே நாம் வந்துள்ளோம். வடக்கு குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. விவசாயத்தை மேம்படுத்த வியூகம் வகுக்கப்பட்டுள்ளது. வடக்கு மக்கள் பற்றி சிந்திக்கக்கூடிய தலைவர் நாட்டின் ஜனாதிபதியாக உள்ளார். அதனால்தான் பாதீட்டில்கூட கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைக் கட்டியெழுப்பும்போது யாழில் கம்பீரத்தை எடுத்துக் காட்டும் வகையில் நிர்மாணங்கள் இடம்பெறவேண்டும் என ஜனாதிபதி எமக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். எனவே, தமிழ் மக்களை நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம். மக்கள் கைவிட்டால்கூட, மக்களுக்காக செய்ய வேண்டிய திட்டங்களை நிச்சயம் நாம் செய்வோம் - என்றார். (அ)

## எம்.பி...

சூரியப்பெரும பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்யும் கடிதத்தை தம்மிடம் கைய ளித்திருப்பதாகப் பாராளுமன்றச் செய லாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

ஹர்ஷன சூரியப்பெருமவின் கடிதத்துக்கு அமைய குறித்த பதவி விலகல் 2025 ஜூன் 20ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதாக செயலாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

இதற்கு அமைய, 10ஆவது பாராளுமன்றத்தில் (கலாநிதி) ஹர்ஷன சூரியப்பெரும ஆசனத்துக்கு வெற்றிடம் ஏற்பட்டிருப்பதாக 1981ஆம் ஆண்டு ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் 64 (5)ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்துள்ளார். (அ)

## அதிவேக....

அமைச்சர் வெளிப்படுத்தினார்.

“ஒன்று மாத்தளையில் உள்ள கொடகமவிலிருந்து 05 கி.மீ தொலைவில் உள்ள கபுடுவ. இது கொழும்பிற்குச் சென்று வருவதை மட்டுமே எளிதாக்குகிறது. மற்றொன்று பெலியத்தவிலிருந்து 06 கி.மீ தொலைவில் உள்ள பெடிகம,” என்று அவர் கூறினார், ஒரு பரிமாற்றத்தை நிர்மாணிக்க ரூ.10 மில்லியனுக்கும் அதிகமான தொகை செலவிடப்படுகிறது.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஹித அபேகுணவர்தன மற்றும் அஜித் பி. பெரேரா ஆகியோர் நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதமாக அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார். (அ)

## ஊர்காவற்றுறை

இலங்கை தமிழ் காங்கிரஸைச் சேர்ந்த அன்னலிங்கம் அன்னராசாவும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை சேர்ந்த ஜெகதீஸ்வரன் யுகந்தனும் முனமொழியப்பட்டனர்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸை சேர்ந்த அன்னலிங்கம் அன்னராசாவுக்கு ஆதரவாக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸை சேர்ந்த 3 உறுப்பினர்களும், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த தலா ஓர் உறுப்பினர் என மொத்தமாக 5 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

அத்தோடு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை சேர்ந்த ஜெகதீஸ்வரன் யுகந்தனுக்கு ஆதரவாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் என மொத்தமாக 5 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

தேசிய மக்கள் சக்தியை சேர்ந்த 3 உறுப்பினர்களும் வாக்களிப்பில் கலந்துகொள்ளாது நடுநிலையாக செயற்பட்டனர்.

இதன் மூலம் திருவுளச்சீட்டு முறையில் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளராக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸை சேர்ந்த அன்னலிங்கம் அன்னராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ந்து இடம்பெற்ற பிரதித் தவிசாளர் தெரிவில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை லெனின் றஞ்சித் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

13 உறுப்பினர்களை கொண்ட ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு ஈழ மக்கள் ஜனநாயக கட்சி சார்பில் 4 உறுப்பினர்களும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் தேசிய மக்கள் சக்தி சார்பில் தலா 3 உறுப்பினர்களும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் 2 உறுப்பினர்களும், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பில் ஒரு உறுப்பினரும் நடந்து முடிந்த தேர்தலில் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் வாகன விபத்தால் 6 மாதங்களில் 2,000 பேர் பலி!

கொழும்பு, ஜூன் 21

2025ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இலங்கையில் வாகன விபத்துகளால் சுமார் 2,000 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் போக்குவரத்துப் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்திக ஹபுகொட தெரிவித்துள்ளார்.

வீதி விபத்துகள், வீதிகளுக்கு தகுதியற்ற வாகனங்கள் மற்றும் ஒழுங்கற்ற சாரதிகளால் ஏற்படுவதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்திக ஹபுபகொட சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர், கடந்த ஆண்டு வீதி விபத்துகளால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையைத் தவிர 7,152 பேர் படுகாயமடைந்ததாக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2025 ஜனவரி 1 முதல் ஜூன் 15 வரையான 6 மாதங்களில், உயிரிழப்புகளை ஏற்படுத்திய 1,133 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. இதில் சுமார் 2 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இது மிகவும் பேரழிவு தரும் சூழ்நிலையாகும். கடந்த



30 ஆண்டு உள்நாட்டுப் போரில் சுமார் 28,000 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் உள்ள கடுமையான நிலைமை என்னவென்றால், ஒவ்வொரு காலையும் தங்கள் கடமைகளுக்காக வீட்டிலிருந்து பாதுகாப்பாக வெளியேறும் 7 பேரின் உயிரற்ற உடல் மட்டுமே வீடு திரும்புகிறது.

2025 ஜூலை 1 முதல் வாகனங்களில் பொருத்தப்பட்ட தேவையற்ற உதிரிப் பாகங்கள் கட்டாயமாக அகற்றப்படும் - என்றார். (அ)

## மடு...

இடம்பெற்றது.

கலந்துரையாடலில் மன்னார் மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நேசரத்தினம் அடிகளார், மடுத் திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், அருட்தந்தையர்கள், அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள், இராணுவம், பொலிஸ், கடற்படை உயர் அதிகாரிகள் என பலர் பங்கேற்றனர்.

இதில் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு சுகாதாரம், குடிதண்ணீர், போக்குவரத்து, மருத்துவ வசதிகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. இதன்போது நாட்டின் பலபாகங்களில் இருந்தும் பல இலட்சக் கணக்கான மக்கள் வருகைதர உள்ள நிலையில் மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு 400 பொலிஸாரை பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மருதமடு திருப்பதியின் ஆடிமாதத் திருவிழா ஜூலை மாதம் 2ஆம் திகதி திருப்பலியுடன் நிறைவடையவுள்ளது. (அ)

## தமிழ் அரசு

தேர்தலில் 20 ஆசனங்களைக்கொண்ட வேலணை பிரதேச சபையில் இம்முறை தேர்தல் ஆசன விசேட பகிர்வின் மூலம் 2 ஆசனங்கள் கூடுதலாக வழங்கப்பட்டதன் அடிப்படையில் 22 உறுப்பினர்கள் உள்ளனர்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி 8 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 3 ஆசனங்களையும்,

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 02 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 04 ஆசனங்களையும் தமிழ் மக்கள் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மூன்று சுயேச்சைக் குழுக்கள் தலா ஒவ்வோர் ஆசனத்தையும் பெற்றிருந்தன.

தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர் சிவலிங்கம் அசோக்குமார் முன்மொழியப்பட்ட நிலையில் வேறு நபர்களின் பெயர்கள் முன் மொழியப்படாததால் அவர் போட்டியின்றி தெரிவானார். அதனை தொடர்ந்து உப தவிசாளராக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கணபதிப்பிள்ளை வசந்தகுமாரன் தெரிவானார்.

அதேவேளை, சுயேச்சைக் குழுவின் உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் தவிசாளர் தெரிவின்போது வெளிநடப்பு செய்தார். (அ)

## இரு தமிழ்

ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சட்டவிரோதமாக சம்பாதித்ததாக நம்பப்படும் பணத்தைப் பயன்படுத்தி பல அரசியல்வாதிகள் சொத்துக்களை வாங்கியுள்ளனர் என்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில், பாதுகாப்புத் துறையின் முன்னாள் தலைமையதிகாரி ஜெனரல் சவேந்திர சில்வாவின் சொத்துக்கள் தொடர்பாகவும் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ)

## வலி.தென்மேற்கு

சார்பில் 8 பேரும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சார்பில் 5 பேரும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் 4 பேரும், தேசிய மக்கள் சக்தி சார்பில் 6 பேரும், ஈழ மக்கள் ஜனநாய கக் கட்சி சார்பில் 2 பேரும்,

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் ஒருவரும், தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் 2 பேரும் அங்கம் வகிக்கின்றனர்.

தவிசாளர் தெரிவுக்கு கந்தையா ஜெசிதனின் பெயரும், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி-அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் நாகராசா பகீரதனின் பெயர்களும் முன்மொழியப்பட்டன.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால், பகிரங்க வாக்கெடுப்பு நடத்துவதா அல்லது இரகசிய வாக்கெடுப்பு நடத்துவதா எனக் கோரப்பட்டது.

பகிரங்க வாக்கடுப்புக்கு ஆதரவாக 19 வாக்குகளும், இரகசிய வாக்கெடுப்புக்கு ஆதரவாக 9 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது, கந்தையா ஜெசிதன், தமிழ் மக்கள் கூட்டணி, ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் அரசுக் கட்சியின் 13 வாக்குகளை பெற்று தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் நாகராசா பகீரதனுக்கு 9 வாக்குகள் அளிக்கப்பட்டன. தேசிய மக்கள் சக்தி நடுநிலை வகித்தது.

உப தவிசாளராக பேரின்பநாயகம் சுபாகரின் பெயர் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பிலும், தர்மகுலசிங்கம் உதயகுமாரின் பெயர் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி-அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பிலும் முன்மொழயப்பட்டது.

இந்த நிலையில், தமிழ் அரசுக் கட்சியின் பேரின்பநாயகம் சுபாகர் உப தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பல்கலைகழகங்களில் பகிடிவதை; 6 மாதங்களில் 30 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஜூன் 21

நடப்பு ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பல்கலைக் கழகங்களில் இடம்பெறும் பகிடிவதைகள் தொடர்பில் 30இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதிகளவான முறைப்பாடுகள் சப்ரகமுவ, கிழக்கு, ஒலுவில் பல்கலைக்கழகங்களிலிருந்து பதிவாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

"இந்த சம்பவங்கள் தொடர்பாக விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. குற்றவாளிகள் கண்டறியப்பட்டால், 20 ஆண்டுகள் வரை சிறை தண்டனை வழங்கப்படலாம்" என்று குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு அளிக்க, 1997 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறும் இந்த அவசர தொலைபேசி இலக்கம் 24 மணிநேரமும் சேவையில் இருக்கும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் இரகசியமாக பரிசீலிக்கப்படும் என்பதுடன், உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதைகளை ஒழிப்பதற்கும் மாணவர்களை துன்புறுத்தல், துஷ்பிரயோகங்களில் இருந்து பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் அதிகாரி கூறினார். (ஐ)

# புலமைப்பரிசில் பரீட்சை 2029 வரை மாற்றமில்லை!

## அறிவித்தது அரசாங்கம்



கொழும்பு, ஜூன் 21

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஒரேயடியாக நிறுத்தப்படாது என்று கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி, 2029 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையை மாற்றாமல் நடத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது. 2029ஆம் ஆண்டுக்கு பிறகு புலமைப்பரிசில் பரீட்சையை நடத்துவது குறித்து 2028 ஆம் ஆண்டில் பரிசீலிக்க ஒரு குழு நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

நேற்றைய தினம் பாராளுமன்ற அமர்வில் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பரீட்சை அழுத்தத்தை குறைப்பதற்கான திட்டத்தை பரீட்சை திணைக்களம் தற்போது தயாரித்து வருகிறது. பாடசாலைகளுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுகளை படிப்படியாக நீக்கவும் புலமைப்பரிசில் காரணமாக மாணவர்கள்மீதான அழுத்தத்தைக் குறைக்கவும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றும் கூறினார். (ஐ)

# 2 கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூன் 21

சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள ஹெரோயின், ஐஸ் போதைப்பொருட்களுடன் சந்தேகநபர் ஒருவரை விசேட அதிரடி படையினர் கைது செய்துள்ளனர்.

கம்பஹா ராகமையை சேர்ந்த 40 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவர் காரில் போதைப்பொருட்களை கடத்திச் சென்றபோதே கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து ஒரு கிலோ 738 கிராம் ஹெரோயின், 504 கிராம் ஐஸ் போதைப் பொருட்களுடன் கைபேசிகள் 2, அவர் பயணித்த கார் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள் 2 கோடி ரூபாய்க்கும் அதிகம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

சாணக்கியன், பிள்ளையான் உட்பட

# 28 முக்கிய அரசியல்வாதிகளின் சொத்துகள் குறித்து விசாரணை

கொழும்பு, ஜூன் 21

**கடந்த அரசாங்கத்தின் செல்வாக்கு மிக்க அமைச்சர்கள், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 28 அரசியல் வாதிகளின் சொத்துகள் தொடர்பாக சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.**

குறித்த நபர்கள் சட்டவிரோதமாக ஈட்டிய பணத்தைப் பயன்படுத்தி சொத்துகளை வாங்கினர் என்று எழுந்த முறைப்பாடுகளுக்கு அமைய, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவு இந்த விசாரணையை ஆரம்பித்துள்ளது.

இதன்படி, நாமல் ராஜபக்ஷ, மகிந்த யாப்பா அபேவர்தன, மஹிந்த அமரவீர, சாமர சம்பத் தசநாயக்க, ரோஹித அபேகுணவர்தன, பவித்ரா வன்னியாராச்சி, கஞ்சன விஜேசேகர, சாகல ரத்நாயக்க, ஜானக திஸ்ஸகுட்டி ஆராச்சி, வஜிர அபேவர்த்தன, மஹிபால ஹேரத், அநுர பிரியதர்ஷன யாப்பா, மனுஷ நாணயக்கார, வடிவேல் சுரேஷ், துஷார சஞ்சீவ பத்திரன, ஹர்ஷன ராஜகருணா, சாணக்கியன் இராசமாணிக்கம், பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், சாந்த அபேசேகர ஆகியோரும் உரிய விசாரணையில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் இவர்கள் குறித்த பிரிவுக்கு அழைக்கப்பட்டு, அவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, முன்னாள் பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவின் சொத்துகள் தொடர்பாகவும் சட்டவிரோத சொத்துகள் புலனாய்வு பிரிவு விசாரணையைத் தொடங்கியுள்ளது.

விசாரணையின்போது, யாரேனும் முறைகேடான ஆதாயங்கள் மூலம் சொத்துகளை வாங்கியிருப்பது தெரியவந்தால், அவை பறிமுதல் செய்யப்பட்டு, தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (ஐ)

# திறந்தவெளி சிறை கைதி தப்பியோட்டம்!

கண்டி, ஜூன் 21

கண்டி - பல்லேகலை திறந்தவெளி சிறைச்சாலையில் இருந்து கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஊழல் குற்றச்சாட்டில் பல்லேகல திறந்தவெளி சிறைச்சாலையின் விவசாய பிரிவில் நியமிக்கப்பட்ட கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் என்று சிறைச்சாலை அதிகாரிகள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கதுருவெல முஸ்லிம் கொலனியை சேர்ந்த 25 வயதான இளைஞரே இவ்வாறு தப்பியோடினார். (ஐ)

# தென்னக்கோன் விவகாரம் 28 பேர் சாட்சியங்கள் பதிவு

கொழும்பு, ஜூன் 21

பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் இதுவரை 28 சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தேசபந்து தென்னகோனுக்கு எதிரான விசாரணைக்காக அமைக்கப்பட்டுள்ள விசாரணைக்குழு அதன் தலைவர் உயர் நீதிமன்ற நீதியரசர் பி. பி. சூரசேன தலைமையில் கூடி 4 தடவைகளில் இந்த சாட்சியங்களை பதிவு பெற்றுள்ளது.

இன்னும் இரண்டு சாட்சிகள் எதிர்வரும் 26 ஆம் திகதிக்குப் பிறகு சாட்சியமளிக்கவுள்ளனர். இதனிடையே, நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் புதன்கிழமை வரை இந்தக் குழு விசாரணைகளை நடத்தவுள்ளது.

இதனிடையே, பொலிஸ் தரப்பில் இருந்து 15 சாட்சிகள் தமது வாக்குமூலங்களை வழங்குவர் என்றும் தெரியவருகிறது. (ஐ)

# கார்ட்டூனிஸ்ட் மூர்த்தி கொழும்பில் காலமானார்!



கொழும்பு, ஜூன் 21

தினக்குரல் உள்ளிட்ட பல்வேறு பத்திரிகைகள் மற் றும் சஞ்சிகைகளில் நீண்டகாலமாக கார்ட்டூனிஸ்டாக பணியாற்றிய அம்மையப்பபிள்ளை யோகமூர்த்தி (கார்ட்டூனிஸ்ட் மூர்த்தி) உடல் நலக் குறைவால் கடந்த வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் புஞ்சி பொரளை லங்கா மலர் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இவரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை பேரவையின் இணைந்து வழங்கும் 2023ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருதை கார்ட்டூனிஸ்ட் மூர்த்தி பெற்றிருந்தார். அத்துடன், கார்ட்டூன்களுக்காக 4 விருதுகளையும் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மருந்து மாத்திரைகள் பயன்பாடு மக்களிடையே மிதமிஞ்சியுள்ளது!

## பிரதி சுகாதார அமைச்சர்



கொழும்பு, ஜூன் 21

நாட்டின் மக்கள் மிதமிஞ்சிய அளவில் மருந்து மாத்திரைகளை பயன்படுத்து கின்றனர் என்று பிரதி சுகாதார அமைச்சர் ஹன்சக விஜயமுனி தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது 863 பொதுப் பெயர் மருந்துகள் பயன்பாட்டில் உள்ளன. இவற்றில் மூன்றில் இரண்டு பங்கு இறக்குமதி செய்யப்பட்டவை. மற்றவை உள்ளூர் தயாரிப்புகள்.

இத்தகைய மருந்து வகைகள் அவசிய மில்லாமல் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. தவறான மருந்து அளிப்பு, வழிகாட்டு நெறிமுறைகள் இல்லாத காரணத்தால் மருந்துகளின் பாவனை மிக அதிகமாக உள்ளது.

நமது நாட்டில் 863 மருந்து வகைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், இங்கிலாந்து போன்ற முன்னேறிய நாடுகளில் கூட இதைவிட குறைவாகவே மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

மருந்து அளிப்பு தொடர்பான நெறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். நவீன நெறிமுறைகள் கொண்டு 450-500 மருந்து வகைகளாக மட்டுப்படுத்த வேண்டும். இது வருடாந்த மருந்து செலவுகளில் சிக்கனத்தை ஏற்படுத்தும். அரசாங்கம் ஆண்டுக்கு 18 ஆயிரத்து 500 கோடி ரூபாயை மருந்துகளுக்காக ஒதுக்குகிறது.

உரிய முறையில் தகவல்கள் பெற்றுக் கொண்டு கொள்வனவு செய்யத் தவறியதன் காரணமாக நாட்டில் மருந்துப் பொருட்கள் சிலவற்றுக்கு பற்றாக்குறை நிலவுகிறது.

எதிர்காலத்தில் நாட்டில் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றும் பிரதி அமைச்சர் கூறினார். (ஐ)

# காணி உரிமையை வலியுறுத்தி ஹற்றனில் இன்று போராட்டம்!

நுவரெலியா, ஜூன் 21

மலையக மக்களின் காணி மற்றும் வீட்டு உரிமை கோரி ஹற்றன் - மல்லியப்பு சந்தியில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த அமைதிவழி போராட்டத்துக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முழுமையான ஆதரவை வழங்கும் என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இந்தப் போராட்டத்துக்கு மலையகத்தின் பல கட்சிகளும், பொது அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.